பக்கங்கள்: 13 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 சித்திரை 31 வெள்ளிக்கிழமை 14.05.2021 கதிர் 190

## இனி இது ரகசியம் அல்ல!

சிலருக்கு சில பதவிகள், நிலைகள் ராசி இல்லை என்பார்கள். அப்படி ஓர் ஊடகவியலாளருக்கு அண்மையில் ஏற்பட்ட இராசியில்லாத நிலைமை பற்றிய தகவல்.

சீனா வழங்கிய 'சினோபோர்ம்' தடுப்பூசிகள் தொடர்பான சர்ச்சை பலருக்கும் தெரிந்தது பக்கம்02 »

# முள்ளிவாய்க்கால் முற்றம் இரவோடிரவாகத் தகர்ப்பு!

## நினைவுக் கல்லும் காணாமல் ஆக்கப்பட்டது





(ந.லோகதயாளன்)

இறுதிப் போரில் உயிரிழந்த தமிழ் உறவுகளை நினைவுகூர்ந்து முல்லைத்தீவு மாவட்டம், முள்ளி ☞13

## நேற்று மட்டும் 2,269 பேருக்கு 'கொரோனா'

இலங்கையில் நேற்று மாத்திரம் 2 ஆயிரத்து 269 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் கண்டறியப்பட்டுள்ளனர்.

இதையடுத்து நாட்டில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு இலட்சத்து 35 ஆயிரத்து 796 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றிலிருந்து ஒரு இலட்சத்து 8 ஆயிரத்து 802 பேர் குணமடைந்துள்ளனர் எனவும், 26 ஆயிரத்து 126 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் அரச தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## குடாநாட்டில் 58 பேருக்கு 'கொரோனா'

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 58 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் மேலும் 74 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்றுள்ளமை நேற்று கண்டறியப்பட்டுள்ளது என மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடம் மற்றும் யாழ்.பல்கலைக்கழக ஆய்வுகூடம் என்பவற்றில் 853 பேரின் மாதிரிகள் நேற்று ☞13

# தூபியையே இடித்தழிக்கும் ராணுவம் தமிழர்களை எப்படிக் கொன்றிருக்கும்?

## சர்வதேசங்களும் உய்த்துணர வேண்டும் என இடித்துரைக்கின்றார் முன்னாள் எம்.பி. சரா



உயிர் துறந்துபோன ஆத்மாக்களை ஆத்மார்த்தமாக நினைவுகூருவதற்கு அமைக்கப்பட்ட நினைவுத்தூபியையே வெறித்தனத்துடன் இடித்தழிக்கும் இராணுவம், போரின்போது தமிழ் மக்களை எப்படிக் கொன்று குவித்திருக்கும் என்பதை உலகம் உணர்ந்துகொள்ள வேண்டும். இலங்கை அரசுக்கு இனியும் தாலாட்டு பாடிக் கொண்டிருக்காது இறுக்கமான தீர்மானங்களை மேற்கொள்ளவேண்டும்.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தருமான ஈ.சரவணபவன் தெரிவித்தார். ☞2

## நினைவேந்தல் நிகழ்வுக்கு முள்ளிவாய்க்காலில் தடை

### முல்லைத்தீவு நீதிமன்றம் உத்தரவு கொரோனா நிலைமை காரணமாம்

முள்ளிவாய்க்கால் பகுதியில் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்துவதற்கும், அந்தப் பகுதியில் மக்கள் ஒன்றுகூடுவதற்கும் பொலிஸார் நீதிமன்றத்தின் ஊடாகத் தடையுத்தரவைப் பெற்றுக்கொண்டுள்ளனர்.

நாட்டில் தற்போது நிலவும் கொரோனா வைரஸ் தொற்று நிலைமையைக் கருத்தில் கொண்டு மே 16ஆம் திகதி தொடக்கம் 22ஆம் திகதி வரையில் முள்ளிவாய்க்கால் பகுதியில் மக்கள் ஒன்றுகூடும் வகையில் எந்த நிகழ்வும் நடத்தப்படக் கூடாது என்று முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்தின் ஊடாக தடை உத்தரவை நேற்றுப் பெற்றுக் கொண்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். ☞2

## நினைவுத்தூபியை உடைப்பது அநாகரிகத்தின் உச்சக் கட்டம்!

### முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை எவராலும் தடுக்கவே முடியாது என்று சுமந்திரன் சூளுரை



(ந.லோகதயாளன்)

முள்ளிவாய்க்கால் முற்றத்தில் கல்லிலான ஒரு தூபியை மட்டும் உடைக்கவில்லை; இலட்சக்கணக்கான தமிழ் மக்களின் இதயங்களைத் தகர்த்திருக்கின்றது. மரணித்தவர்களின் நினைவுத் தூபியை உடைப்பதென்பது அநாகரிகத்தின் உச்சக் கட்டம்.

– இவ்வாறு தமிழ்த் ☞2

## பொலிஸில் முறைப்பாடு

முள்ளிவாய்க்கால் பகுதியில் நினைவுச் சின்னம் சேதமாக்கப்பட்டுள்ளமை தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது,

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக்கட்டமைப்பைச் சேர்ந்த மதகுருமார்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன் மற்றும் செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் இந்த ☞2

# மூன்று நாள்களும் கடைகளும் பூட்டு!

## 17ஆம் திகதி முதலே 'அடையாள அட்டை' நடைமுறை அமுல் என்கின்றது பொலிஸ்

நாட்டில் முழு நேரப் பயணக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ள நேற்றிரவு 11 மணி முதல் 17ஆம் திகதி அதிகாலை 4 மணிவரை மக்கள் நடமாட்டம் முழுமையாகக் கட்டுப்படுத்தப்படும் எனவும், இந்தக் காலப்பகுதியில் எந்தவொரு வர்த்தக நிலையத்தையும் திறக்க முடியாது எனவும் பொலிஸ் ஊடகப் ☞2

## தடைகளை மீறி இரகசியத் திருமணத்தில் கலந்துகொண்ட 21 பேருக்கு 'கொரோனா'

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்., தையிட்டி பகுதியில் நடைபெற்ற இரகசியத் திருமண நிகழ்வில் கலந்து கொண்ட 21 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று கண்டறியப்பட்டுள்ளது.

கொரோனாப் பெருந்தொற்று காரணமாக நாட்டில் திருமணம் உள்ளிட்ட பொது மக்கள் ஒன்றுகூடும் அனைத்து நிகழ்வுகளுக்கும் அரசு தடை விதித்துள்ளது. இந்நிலையில், தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட தையிட்டி பிரதேசத்தில் இரகசியமான முறையில் திருமண நிகழ்வொன்று நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் பின்னர் தகவல் அறிந்த சுகாதாரப் பிரிவினர் திருமண நிகழ்வில் கலந்துகொண்ட மணமக்கள் குடும்பம் உள்ளிட்ட சிலரை இனங்கண்டு தனிமைப்படுத்தி இருந்தனர்.

அவர்களில் சிலருக்கு முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனை முடிவில் 21 பேருக்குத் தொற்றுள்ளமை ☞2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தான்.

இந்தத் தடுப்பூசியை உலகளாவிய ரீதியிலான பாவனைக்கு உலக சுகாதார ஸ்தாபனம் இன்னும் அனுமதி அளித்திருக்கவில்லை.

திடீரென இந்த ஊசியை இலங்கையில் பயன்படுத்துவதற்கு உலக சுகாதார ஸ்தாபனம் அனுமதி வழங்கியிருக்கின்றது என்று அறிவிக்கப்பட்டது. அதன் பேரில் பொதுமக்களுக்கு அந்தத் தடுப்பூசி வழங்கும் பணி மும்முரமாக நடைபெறுகின்றது.

அந்தத் தடுப்பூசியை இலங்கையில் பயன்படுத்துவதற்கு உலக சுகாதார ஸ்தாபனம் அனுமதியளித்துள்ளது என்ற அறிவிப்போடு அந்த விடயத்தை முடித்திருந்தால் சர்ச்சை ஏற்பட்டிருக்காது. விவகாரத்தை அதற்கு மேல் யாரும் நோண்டும் நிலைவரம் வந்திருக்காது.

ஆனால், அதுவரை காலமும் கொழும்பில் தொலைக்காட்சி நிறுவனம் ஒன்றில் செல்வாக்கோடு விளங்கிய முன்னணி ஊடகவியலாளர் ஒருவர் தமது நிறுவனத்துடனான ஒப்பந்தத்தை முறித்துக் கொண்டு வந்து, ஜனாதிபதியின் பேச்சாளராக நியமனம் பெற்றார். தென்னிலங்கை ஊடகத்துறையில் இது முக்கிய விடயமாகப் பேசப்பட்டது.

பதவியேற்ற அவர் ஜனாதிபதி சார்பில் முதல் விடுத்த அறிவிப்பு சீனத் தடுப்பூசிக்கு உலக சுகாதார ஸ்தாபனம் அனுமதி அளித்திருப்பது பற்றிய விடயம்தான். அந்த அனுமதிக்குள் பொதிந்து கிடந்த உள்சூத்திரம் – உள்சூக்குமம் – பாவம் அந்த ஊடகவியலாளருக்குத் தெரிந்திருக்க வில்லை. ஜனாதிபதி செயலகத்துக்குள் ஒவ்வொரு விடயத்திலும் இப்படி ஆழான, அர்த்தங்கள் வெளியே தெரியாமல் மறை பொருளாகப் புதைந்து கிடக்கும் என்றும் அவர் எதிர்பார்த்திருக்கவில்லை. விடயம் புரியாத அப்பாவி அவர்.

இப்படி சீனத் தடுப்பூசிகளின் பாவனைக்கு உலக சுகாதார ஸ்தாபனத்தின் அனுமதி கிட்டியமையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஒரு நற்பெயர் – credit - வாங்கிக் கொடுத்துத் தமது புதிய நியமனத்தின் சிறப்பை ஜனாதிபதிக்குப் புரிய வைக்கலாம் என அவர் திட்டமிட்டிருப்பார் போலும்.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் பணிப்பாளர் நாயகத்துடன் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முதல் நாள் 'சூம்' முறையில் உரையாடினார், உடனே அடுத்த நாள் சீனத் தடுப்பூசிக்கு உலக சுகாதார ஸ்தாபனம் அனுமதி அளித்தது – என்று ஜனாதிபதிக்கு மகுடம் சூட்டுகின்றார் என நினைத்துக் கொண்டு அறிவிப்பு விடுத்தார் ஜனாதிபதியின் புதிய பேச்சாளர்.

அவ்வளவுதான். அந்த அறிவிப்பை எதிர்க்கட்சிகள் 'கப்' எனப் பிடித்துக் கொண்டன. *"ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உலக சுகாதார ஸ்தாபனத்தின் சுயாதீன செயற்பாட்டில் தலையிட்டு, தனிப்பட்ட செல்வாக்குச் செலுத்தி, அழுத்தம் கொடுத்து, இந்த அனுமதியைப் பெற்றிருக்கின்றார். இது தவறான நடவடிக்கை. உலக சுகாதார ஸ்தாபனம் வெளித் தலையீடுகள், செல்வாக்குகள் இல்லாமல், சுதந்திரமாக இத்தகைய விடயங்களை உரிய கால அவகாசம் கொடுத்துக் கையாள வேண்டும். அரசியல் தலைவர்களின் அழுத்தங்களுக்கு அடிபணிந்து சுயாதீன முடிவை மாற்றிக் கொள்ளக் கூடாது."* – என்று விமர்சிக்கத் தொடங்கின அவை.

பார்த்தது, உலக சுகாதார ஸ்தாபனம். இனி மேலும் வாயை மூடிக்கொண்டிருந்தால் நிலைமை மோசமாகும், நிறுவனத்தின் பெயர் கெட்டுப் போகும் என்று எண்ணி, உண்மையைப் போட்டுடைத்தது.

'நாங்கள் ஒன்றும் எங்களின் அனுமதியைக் கொடுக்கவில்லை. ஒரு நாடு தனது அவசர தேவை கருதி எந்த சுகாதார உற்பத்திப் பொருளையும் தன்னிஷ்டப்படி பயன்பத்தும் தீர்மானத்தை எடுப்பதற்கான அதிகார இறைமை கொண்டது. தன் அவசர நிலை கருதி அந்தத் தயாரிப்பை அந்த நாடு பயன்படுத்தும் முடிவைத் தானே எடுக்குமானால் எமக்கு ஆட்சேபனை ஏதுமில்லை. இதுதான் நிலைவரம்" – என்ற சாரப்பட உலக சுகாதார ஸ்தாபனம் வெளிப்படையாகக் கூறிவிட்டது. ஆக உலக சுகாதார ஸ்தாபனம் அந்த தடுப்பூசிக்கு அங்கீகாரம் ஏதும் வழங்கவில்லை என்பதுதான் உண்மை நிலைமை.

ஜனாதிபதியின் பேச்சாளர் பதவியைப் புதிதாக ஏற்ற ஊடகவியலாளர், அதிகப் பிரசங்கத்தனமாக, ஜனாதிபதிக்கு நல்ல பெயர் வாங்கிக் கொடுக்கின்றார் என்று நினைத்துக் கொண்டு, முதல் அறிவிப்பிலேயே சொதப்பி, ஜனாதிபதியை இக்கட்டில் மாட்ட வைத்து விட்டார்.

இவரை ஏன் தனது பேச்சாளர் பதவிக்கு நியமித்தோம் என ஜனாதிபதியே இப்போது யோசிக்கத் தொடங்கியிருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

★ ★ ★

கம்பவாரிதி இ.ஜெயராஜ் எங்கள் குடும்ப நண்பர். என் பாடசாலைக் காலத் தோழர். நானும் என் சகோதரர்களும் அவருடன் கம்பன் பணியில் இணைந்திருந்த காலம் இனியது. இலக்கிய சர்ச்சைகள், பத்திரிகை நட்புகள், தனிப்பட்ட கருத்து நிலைப்பாடுகள் தாண்டி எங்கள் உறவும், புரிந்துணர்வும் ஆழமானவை. என் பெற்றோருக்கு அவரும் ஒரு பிள்ளை என்பேன்.

நேற்று மாலை அவர் பற்றி வெளியான செய்தி – முகநூல் கணக்குகளில் பரவிய தகவல் – எல்லோரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியது. நான் ஒரு கணம் அதிர்ந்து போனேன்.

நேற்றுப் பிற்பகல்தான் இந்த வாரத்துக்குரிய அவரின் கேள்வி – பதில் பத்திக்குரிய விடயதானம் மின் அஞ்சலில் வந்திருந்தது. வழமைபோல அவசர அவசரமாக ஒரு மேலோட்டம் வாசித்து மகிழ்ந்தேன்.

சற்று நேரத்தில் அந்தச் செய்தி. நேரடியாக கம்பவாரிதி அவர்களுக்குப் பக்கத்தில் எப்போதும் நிழலாய் இருக்கும் என் நண்பருக்குத் தொலைபேசி அழைப்பை எடுத்தேன். நான் எப்படிக் கேட்பது என்று, என்னை ஒரு கணம் தயார் பண்ணிக் கொண்டு 'ஹலோ' என்றேன். என்னைப் பேச விடாமல் முந்திக் கொண்டு அவர் பதில் வந்தது.

*"என்ன நீயும் மரண அறிவித்தல் தயார் செய்து விட்டாயா? அப்படி ஒன்றும் இல்லை. எல்லாம் சுத்தப்பொய்!"* – என்று கூறி உண்மையில் நடந்த விடயங்களை விளக்கினார்.

கம்பன் கழகங்களில் முன்னணி உரையாற்றும் பேச்சாளர் ஒருவர் தமிழகத்தில் காலமாகிவிட்டார். அவருக்கு அஞ்சலிக் கவிதை ஒன்றை கம்பவாரிதி இ.ஜெயராஜ் எழுதியிருந்தார்.

பெங்களூரில் உள்ள அன்பர் ஒருவர் தாம் வெளியிடும் குறிப்பின் தாக்கம் எத்தகையது என்பதைப் புரியாமல், அந்த அஞ்சலிக் கவிதையை வெறுமனே கம்பவாரிதியின் படத்துடன் பிரசுரம் செய்து விட்டார். ஏற்கனவே கம்பன் புகழ்பாடும் இன்னொரு பேச்சாளருக்கு வரைந்த கவிதை அதே பேச்சுத்துறையில் உச்சத்தைத் தொட்ட கம்பவாரிதிக்கும் தப்பாமல் பொருந்தும் அல்லவா? ஆக, கம்பவாரிதி வேறு ஒருவருக்கு வரைந்த அஞ்சலி குறிப்பு, கடைசியில் அவருக்கான அஞ்சலிக் குறிப்பாக கருதப்பட, தமிழ் இலக்கிய ஆர்வலர்கள், சைவசித்தாந்த அறிஞர்களும் பதறியடித்து அதிர்ந்து போயினர்.

ஒவ்வொருவருக்கும் நிலைமை விளங்கி, பலரையும் ஆசுவாசப்படுத்த நீண்ட நேரம் பிடித்தது.

ஆனால் ஒன்றுமட்டு உண்மை. நம் கம்பவாரிதிக்கு ஆயுசு நூறு. கண்ணூறு இதனுடன் கழிந்தது என்று கருதலாம்.

வாழ்க நீ எம்மான்!

–மின்னல் –

---

## நினைவேந்தல் நிகழ்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதன்படி முல்லைத்தீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களைச் சேர்ந்த து.ரவிகரன், ம.ஈஸ்வரி, பீற்றர் இளஞ்செழியன், க.விஜிந்தன், ச.விமலேஸ்வரன் ஆகியோரின் பெயர் குறிப்பிட்டு தடை உத்தரவு பெறப்பட்டுள்ளது.

## தூபியையே இடித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி சேதமாக்கப்பட்டுள்ளமை தொடர்பில் அவர் விடுத்துள்ள கண்டன அறிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

முள்ளிவாய்க்கால் ஈழத் தமிழரின் அடையாளம். எங்கள் உறவுகள் குருதிகள் கொப்பளிக்க கொல்லப்பட்ட தேசம். இனப்படுகொலையை இன்றும் பறைசாற்றிக் கொண்டிருக்கும் மண். சிறிலங்கா அரசின் வெறியாட்டத்தால், சிங்கள – பௌத்தத்தின் வழி வந்து மகாவம்சத்து வரலாற்றில் ஊறிய படைகளால் தமிழர்கள் துடிக்கடித் துடிக்க கொல்லப்பட்ட நிலம். இறுதிப் போரின் அடையாளமாக இன்றும் இருப்பது முள்ளிவாய்க்கால்.

இனப்படுகொலையின் அடையாளமாகவும், எங்கள் உறவுகள் கண்ணீர்விட்டுக் கதறியழுது மன ஆறுதலடைவதற்காகவும் அந்த மண்ணில் அமைக்கப்பட்டதே முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் சிங்கள அரசுகளை எப்போதும் கிலி கொள்ளச் செய்தே வந்திருக்கின்றது. தடைகளால் நினைவேந்தலை முடக்க முயல்பவர்கள் இம்முறை அடையாளத்தையே அழித்தொழிக்க முயன்றிருக்கின்றார்கள்.

வரலாறுகளை அடுத்தடுத்த சந்ததிக்கு கடத்தும் வேர்கள் இந்த நினைவுத்தூபிகள். இவற்றைத் துடைந்தெறிந்தால் தமிழர் மனங்களிலிருந்து அந்த முள்ளிவாய்க்கால் என்னும் ஆறாத வடுவை காணாமல் ஆக்கிவிடலாம் என்று சிங்கள அரசும், இராணுவமும் கணக்குப்போடுகின்றன.

அதற்காகவே இரவோடு இரவாக இராணுவத்தின் படைபட்டாளம் காவல் காத்து நிற்க, நினைவுத்தூபி சேதாரமாக்கப்பட்டுள்ளது. நடுகைக் கல் காணாமல் ஆக்கப்பட்டுள்ளது.

கல்லறைகளை, மக்களின் உயிரிழப்புக்குச் சாட்சியான நினைவுத் தூபிகளையே கொலைவெறியோடு வீழ்த்திச் சரிக்கும் இவர்களா மனிதாபிமான போரை நடத்தியிருப்பார்கள்? மனச்சாட்சியுள்ளவர்களாக இருந்திருந்தால் எங்கள் அஞ்சலி உரிமையைதானே அனுமதித்திருப்பார்கள்?

யாருமற்ற – எந்தக் கண்காணிப்புமற்ற – சாட்சியமற்ற – போரின்போது இவர்கள் என்ன செய்திருப்பார்கள் என்பதை இப்போது உலகின் கண்களுக்கு காட்டியிருக்கின்றார்கள். தங்களின் குரூர முகம் இதுதான் என்பதை முரசறைந்து சொல்லியிருக்கின்றார்கள். புத்தனின் வழியில் நடப்பதாகச் சொல்லும் இவர்கள் அவனை எட்டி உதைப்பதே தங்கள் கொள்கை என்பதை பறைசாற்றியிருக்கின்றார்கள்.

ஈழத் தமிழர்கள் இலங்கையில் வேரறுக்கப்படுகின்றார்கள் என்பதற்கு இதைவிட வேறு என்ன சான்று வேண்டும்.? இனியும் உள்ளக விசாரணை என்று சொல்லிக் கொண்டும், தடயங்களைச் சேகரிக்கின்றோம் என்று கதையளந்து கொண்டும் இருக்காமல், இருக்கின்ற இருப்பையே ஆழமாய் தோண்டி அவர்கள் அழிக்க முன்னர் நீதியை நிலைநாட்டுங்கள் என்று உலக நாடுகளிடம் உரக்கக் கேட்கின்றோம் – என்றுள்ளது.

---

## மூன்று நாள்களும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பேச்சாளரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:–

நேற்றிரவு 11 மணி முதல் 17ஆம் திகதி திங்கட்கிழமை அதிகாலை 4 மணி வரை அமுல்படுத்தப்படும் தொடர் முழு நேரப் பயணத் தடையின்போது மக்கள் வீட்டுக்குள்ளேயே இருக்க வேண்டும். இக்காலப்பகுதியில் வர்த்த நிலையங்களைத் திறப்பதற்கு அனுமதி வழங்கப்படாது. அனைத்து கடைகளும் மூடப்பட வேண்டும்.

அத்தியாவசிய சேவைகளுக்கு மாத்திரமே போக்குவரத்துகளை மேற்கொள்ள முடியும். பயணக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ள காலப்பகுதியில் வைத்தியசாலைக்குச் செல்வதற்கு அனுமதி வழங்கப்படும். மருந்துப் பொருள்களை விநியோகிக்கவும் அனுமதி வழங்கப்படும்.

தேசிய அடையாள அட்டையின் இறுதி எண்ணுக்கமைய வீட்டை விட்டு வெளியேறும் நடைமுறை 17ஆம் திகதி முதலே அமுல்படுத்தப்படும். மேற்படி மூன்று நாட்களுக்கு அந்த நடைமுறை பொருந்தாது. அனைவரும் வீட்டில் இருக்க வேண்டும் – என்றார்.

---

## பொலிஸில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளனர்.

இதேவேளை, முள்ளிவாய்க்காலில் உயிர் நீத்த மக்களுக்கு நானாட்டான் பிரதேச சபையின் நேற்றைய 39ஆவது அமர்வின்போது சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

நானாட்டான் பிரதேச சபையின் 39 ஆவது அமர்வு நேற்று முற்பகல் 10 மணியளவில் சபையின் தவிசாளர் திருச்செல்வம் பரஞ்சோதி தலைமையில் இடம்பெற்றபோது அஞ்சலி செலுத்தப்பட்டது.

---

## நினைவுத்தூபியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி உடைக்கப்பட்டதைத் தமிழ் தேசிய கூட்டமைப்ப வன்மையாகக் கண்டிக்கின்றது. இந்தச் செயலானது வெறுமனே கல்லிலான ஒரு தூபியை மட்டும் உடைக்கவில்லை; இலட்சக்கணக்கான தமிழ் மக்களின் இதயங்களைத் தகர்த்திருக் கிறது. மரணித்தவர்களின் நினைவுத் தூபியை உடைப்பதென்பது அநாகரிகத்தின் உச்சக்கட்டம்.

இராணுவமும் பொலிஸும் அந்த இடத்துக்கு வந்த பார்வையிட்ட பின்னர்தான் நினைவுத் தூபி உடைக்கப்பட்டுள்ளது. ஆனால், போரில் இறந்தவர்களை நினைவு கூருவதற்கு எவரும் தடைவிதிக்க முடியாது. அந்த நினைவுகளை எந்த உத்தரவும் மழுங்கடிக்கவும் முடியாது. நாம் முள்ளிவாய்க்கால் நினைவேந் தலைச் செய்வோம் – எவராலும் தடுக்க முடியாதபடி செய்வோம் – என்றார்.

---

## தடைகளை மீறி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கண்டறியப்பட்டுள்ளது.

இதேவேளை, கரவெட்டி பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட நெல்லியடி பிரதேசத்தில் உள்ள பிரபல வெதுப்பாக ஊழியர் ஒருவருக்குத் தொற்று கண்டறியப்பட்ட நிலையில் நேற்று ஏனைய ஊழியர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் 11 பேருக்குத் தொற்று கண்டறியப்பட்டுள்ளது.

அத்துடன் இந்தியாவில் இருந்து சட்டவிரோதமான முறையில் வந்து குருநகர் பகுதியில் பதுங்கியிருந்த நிலையில் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்ட நான்கு பேர் கொண்ட குடும்பத்தில் குழந்தை ஒன்றுக்குத் தொற்று கண்டறியப்பட்டுள்ளது.

அது தவிர யாழ்ப்பாண மாநகர சுகாதர வைத்திய அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட பகுதிகளில் 6 பேருக்குத் தொற்று கண்டறியப்பட்டுள்ளது.

அதேவேளை, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட 6 பேருக்கும், பருத்தித்துறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட 6 பேருக்கும், சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட 5 பேருக்கும், தெல்லிப்பழை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கும் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

# தூபிகளில் கைவைக்கும் காட்டுமிராண்டிகள் தமிழர்களுக்கு எவ்வாறு தீர்வை வழங்குவர்?

## ரவிகரன் காட்டம்



**ந.லோகதயாளன்**

யாழ்ப்பாணம், மே13

இறந்தவர்களின் நினைவுத்தூபிகளிலேயே கைவைக்கும் காட்டுமிராண்டிகள், தமிழர்களுக்கு எவ்வாறு தீர்வினைத் தருவார்கள் என வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் து.ரவிகரன் கேள்வி எழுப்புகின்றார்.

இறந்தவர்களின் நினைவாக அமைக்கப்பட்டுள்ள முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபியையே காட்டுமிராண்டித்தனமாக உடைத்துச் சேதப்படுத்துகின்றவர்கள், தமிழர்களுக்கு எவ்வாறு தீர்வினைத் தருவார்கள்? என முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளார்.

இறுதிக்கட்ட யுத்தத்தின்போது கொடூரமான முறையில் படுகொலைசெய்யப்பட்ட அப்பாவித் தமிழ் மக்களின் நினைவாக முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் அமைக்கப்பட்ட நினைவுத் தூபி, கடந்த புதன்கிழமை இரவு இரவு விசமிகளால் உடைத்துச் சேதமாக்கப்பட்டுள்ளது.

இந் நிலையில் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் மற்றும் கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர் சின்னராசா லோகேஸ்வரன் ஆகியோர் நேற்று முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்திற்குச் சென்று நிலைமைகளைப் பார்வையிட்டிருந்தனர்.

இதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் –

இந்த உலகிற்கே தெரியும் கடந்த 2009 மே 18 என்பது, எமது தமிழினத்தை இலங்கை அரச படைகள் குண்டுகள் பொழிந்து கொடூரமாக அழித்த நாள் மே 18. இந் நாளை நாம் ஒவ்வொரு வருடமும் நினைவு கூர்ந்து வருகின்றோம்.

குறிப்பாக உறவுகளை இழந்த மக்கள் பெருமளவானோர் இந்த முள்ளிவாய்க்கால் முற்றத்தில் ஒன்றுகூடிதங்களுடையஉறவுகளைஎண்ணிகண்ணீர்விட்டு, தத்தமது சமய முறைப்படி அஞ்சலிகளையும் மேற்கொள்வார்கள்.

இந்நிலையில் இந்த முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில், நாம் அனைவரும் இணைந்து அமைத்த நினைவுத்தூபி கடந்த புதன்கிழமை இரவு விசமிகளால் உடைக்கப்பட்டிருக்கின்றது.

அந்த இடத்தைச் சூழ இராணுவம் குவிக்கப்பட்டிருந்தும், நினைவுத்தூபி உடைத்த இடத்தில் இராணுவத்தின் காலணித் தடங்களை ஒத்த தடையங்கள் இருக்கின்றமையும், எமக்கு பல சந்தேகங்களையும் கேள்விகளையும் தோற்றுவித்துள்ளது.

குறிப்பாக காட்டுமிராண்டித்தனமாக சிங்களக் காடையர்களால் உடைக்கப்பட்டிருக்கின்றது என்றுதான் சொல்லவேண்டும்.

இப்படியானகொடூரஎண்ணத்தைக்கொண்டவர்கள் தமிழர்களுக்கு எப்படித் தீர்வுதரப்போகின்றார்கள்?

நீங்கள் எவ்வளவு அட்டூழியங்கள் புரிந்தாலும் எங்களுடைய நடவடிக்கைகள் தொடரும் என்பதைத் தெளிவாகச் சொல்லிவைக்கவிரும்புகின்றோம் – என்றார்.

# மதுபானத்தை களவாக விற்க முயன்றவர் கைது!



தருமபுர பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய கடந்த புதன்கிழமை தருமபுர பொலிஸ் பிரிவுக்குற்பட்ட கல்மடுநகர் பகுதியில் விற்பனைக்குத் தயார் நிலையில் மறைத்துவைக்கப்பட்டிருந்த ரின் பியருடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் தருமபுர பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ளமையுடன் அவரை கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர்.

# வவுனியாவில் வெயில் வேட்கையை தணிக்க நுங்கு விற்பனை அமோகம்



வவுனியா மாவட்டத்தில் தற்போது வெயில் சுட்டெரித்து வருவதுடன், நாளுக்கு நாள் வெப்பத்தின் தாக்கம் அதிகரித்து பொதுமக்களை வாட்டி வதைத்து வருகிறது. இந்நிலையில் வெயிலின் தாக்கத்தைப் போக்க பழச்சாறு, குளிர்பானங்கள் போன்றவற்றை குடிப்பது போல் நுங்குகளையும் பொதுமக்கள் விரும்பி வாங்கிக் குடிக்கின்றனர்.

அந்தவகையில், வவுனியா மாவட்டத்தின் பல பகுதிகளிலும் நுங்கு விற்பனை அமோகமாக நடந்து வருகிறது. ஏராளமான பொதுமக்கள் நுங்கை வாங்கிக் குடிப்பதுடன், வீடுகளுக்கும் ஆர்வத்துடன் வாங்கியும் செல்கின்றனர். நகர்ப்புறங்களில் 50 ரூபாக்கு 3 சுளை நுங்கு விற்கப்படுகிறது. உடலின் ஆரோக்கியத்தைப் பாதுகாக்கும் என்பதாலும் குறிப்பிட்ட கோடை காலத்தில் மட்டுமே பனை நுங்கு கிடைக்கும் என்பதாலும் விலையைப் பொருட்படுத்தாமல் பனை நுங்குகளை சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் ஆர்வத்துடன் வாங்கிச் செல்கின்றனர்.

இது தொடர்பாக நுங்கு விற்பனையாளர்கள் கூறுகையில் –

நுங்கு வெட்டி விற்பனை செய்யும் தொழிலைக் கோடை காலங்களில் செய்து வருகிறோம். கோடை காலத்தில் உடலுக்குத் தேவையான நார் சத்து, நீர் சத்து உள்ளிட்ட பல்வேறு சத்துகள் நிறைந்துள்ளதால் உடல் ஆரோக்கியத்திற்கு மிகவும் உதவியாக பனை நுங்கு உள்ளது. லாபம் இல்லாவிட்டாலும் ஒவ்வொரு வருடமும் நுங்கு விற்பனையை சேவை அடிப்படையில் தொடர்ந்து செய்ய விரும்புகிறோம்.

முன்பெல்லாம் கிராமங்களில் நிறைய பனைமரங்கள் தென்படும். தற்போது பனை மரங்களைப் பார்ப்பது அரிதாகிவிட்டது. மரங்களைத் தேடி அலைந்து கண்டுபிடிக்கவேண்டியசூழல்உள்ளது. பெரும்பாலான மரங்கள் அழிந்துவிட்டன. இதனால் நுங்குகளுக்குத் தட்டுப்பாடும் உள்ளது. மக்கள் நகரங்களில் ஆர்வமாக வாங்கிச் செல்கின்றனர். பனை மரங்களை அதிகளவில் வளர்ப்பதற்கு அரசாங்கம் மற்றும் விவசாயிகள் முன்வர வேண்டும் என்றனர்.

# வட்டுக்கோட்டை சிகிச்சை நிலையத்துக்கு யாழ். படைகளின் கட்டளைத் தளபதி விஜயம்

யாழ். பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதி வட்டுக்கோட்டையில் தற்காலிகமாக அமைக்கப்பட்ட சிகிச்சை நிலையம் தொடர்பாக பரிசீலனை மேற்கொண்டார்.

கொவிட் – 19 கட்டுப்பாட்டுச் செயலணியின் தலைவரும், பாதுகாப்புப் படைகளின் பிரதானியும் மற்றும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வாவின் எண்ணக்கருவிற்கு அமைவாக நாட்டிலே அதிதீவிரமாக பரவிவருகின்ற கொவிட் – 19 வைரஸின் மூன்றாவது அலையைக் கட்டுப்படுத்தும் முகமாக யாழ்ப்பாணம் பகுதியில் கண்டறியப்படுகின்ற தொற்றாளர்களைத் தங்கவைத்துப் பராமரிக்கும் நோக்கில் இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றசெயற்திட்டங்களில்ஒன்றாகவட்டுக்கோட்டை பகுதியில் உள்ள தொழில்நுட்பக் கல்லூரி பாதுகாப்புப் படைத் தலைமையகம் (யாழ்ப்பாணம்) கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பிரியந்த பெரேராவின் மேற்பார்வையின் கீழ் குறிப்பிட்ட சில தினங்களில் முழுமையாகத் திருத்தியமைக்கப்பட்ட தற்காலிக சிகிச்சை நிலையத்தைப் பார்வையிடுவதற்காக 2021 மே மாதம் 12 அன்று யாழ். பாதுகாப்புப் படைகளின் கட்டளைத்தளபதி விஜயம் மேற்கொண்டிருந்தார்.



மேலும் 200 கட்டில்களைக் கொண்டதாக குறித்த சிகிச்சை நிலையம் யாழ்ப்பாணப் பகுதியில் கடமையாற்றுகின்ற இராணுவ வீரர்களின் முழுசரீர ஒத்துழைப்பின் கீழ் திருத்தியமைக்கப்பட்டதுடன் பருத்தித்துறை மந்திகை ஆதார வைத்தியசாலையின் சுகாதாரப் பரிவினரின் மூலம் சிகிச்சைகள் மேற்கொள்ளப்படவுள்ள நிலையில் குறித்த சிகிச்சை நிலையத்தின் வேலைத்திட்டங்களை பாரிசீலிக்கும் முகமாக கட்டளைத் தளபதியால் விஜயம் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வவுனியா கொரோனா சிகிச்சை நிலையத்தை பார்வையிட்டார் வடமாகாண ஆளுநர் சாள்ஸ்

## ஒரு தொகுதி பொருள்களும் கையளிக்கப்பட்டன



வவுனியா, மே 14

வவுனியா பொருளாதார மத்திய நிலையத்தில் அமைக்கப்பட்ட கொரோனா சிகிச்சை நிலையத்தை பார்வையிட்ட வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சாள்ஸ், சிகிச்சை நிலையத்துக்குத் தேவையான ஒரு தொகுதி பொருள்களையும் கையளித்தார்.

வவுனியா பொருளாதார மத்திய நிலையத்தில் 200 கட்டில்களைக் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ள கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு கடந்த புதன்கிழமை மாலை விஜயம் செய்த வடமாகாண ஆளுநர், அதன் கட்டுமாணப் பணிகளைப் பார்வையிட்டதுடன், கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு வரும் நோயாளருக்குத் தேவையான ஒரு தொகுதி பொருள்களையும், வவுனியா மாவட்ட அரச அதிபர் சமன்பந்துலசேன மற்றும் வவுனியா மாவட்ட கொவிட் செயலணியின் இராணுவப் பொறுப்பதிகாரி மேஜர் ஜெனரல் டி.எம்.எச்.டி.பண்டாரா ஆகியோரிடம் கையளித்தார்.

அத்துடன், சிகிச்சை நிலைய வசதிகள் மற்றும் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகள் தொடர்பிலும் அரச அதிகாரிகள், சுகாதார பிரிவினர் மற்றும் இராணுவ அதிகாரிகள் ஆகியோருடன் கலந்துரையாடியிருந்தார். (100)

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## இப்போதைக்கு இல்லை தேர்தல்

**தென்னிலங்கையின் பௌத்த, சிங்களப் பேரினவாதக் கிளர்ச்சியை – உணர்ச்சியை – வெறியாக ஊட்டி, இலங்கைத் தீவில் சிறுபான்மை இனங்களை நசுக்கி சிங்களத் தேசியத்தை நிலை நிறுத்தப் போகின்ற வரலாற்று நாயகர்களாகத் தங்களைக் காட்டி, மீண்டும் அதிகாரத்துக்கு வந்த ராஜபக்ஷக்களின் செல்வாக்கு இப்போது மளமளவென்று சரிய ஆரம்பித்திருப்பது கண்கூடு.**

**கொவிட் பரவலைக் கட்டுப்படுத்துவதில் தவறான கையாள்கை, அதனால் ஏற்பட்ட பின்னடைவுகள், விலைவாசி உயர்வு, வேலையின்மை, மோசமான பொருளாதார நிலைமையால் ஏற்பட்டுள்ள நெருக்கடிகள், பண வீக்கம் என்ற இன்னோரன்ன காரணங்களினால் மக்கள் செல்வாக்கை இழந்து வருகின்றது ராஜபக்ஷக்களின் அரசு.**

**ஜனாதிபதித் தேர்தலில் பெரு வெற்றியீட்டினார் கோட்டாபய ராஜபக்ஷ.**

**தற்போதைய விகிதாசாரப் பிரதிநிதித்துவ தேர்தல் முறைமையின் கீழ் நாடாளுமன்றத்தில் எந்தக் கட்சியும் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் கூடிய அரசை நிறுவ முடியாது என்ற நம்பிக்கையைத் தகர்த்து, பொதுத் தேர்தலிலும் பெரு வெற்றியீட்டினர் ராஜபக்ஷக்கள்.**

**எதிர்க்கட்சிகளின் இருப்பையே, நிர்மூலமாக்கி, அசுர பலத்துடன் நாடாளுமன்றத்தை நிரப்பிய ராஜபக்ஷக்களின் அரசு, ஆட்சி விவகாரங்களைத் தவறாகக் கையாண்டு அதன் விளைவாக மக்கள் நம்பிக்கையையும் செல்வாக்கையும் கொஞ்சம் கொஞ்சமாக இழந்து வருகின்றது.**

**கிடைத்த பெருவாரியான நாடாளுமன்றப் பலத்தை வைத்துக் கொண்டு மக்கள் நலனோம்பும் திட்டங்களை வகுத்து முன்னெடுக்க வேண்டிய ஆட்சித் தலைவர், அதை விடுத்து, தம்மை சர்வாதிகாரியாக மாற்ற வழி செய்யும் விதத்தில் மேலும் அதிகாரங்களைக் கட்டுமட்டில்லாமல் தாம் பெற்றுக்கொள்ளும் விதத்தில் அரசமைப்புக்கான இருபதாவது திருத்தத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றும் கைங்கரியத்தை மட்டுமே ஒழுங்காக மேற்கொண்டார்.**

**மற்றெல்லாவற்றிலும் குழப்பமும், பின்னடைவும்தான் மிச்சம்.**

**பிணை முறி ஊழல் மூலம் நல்லாட்சி அரசு பலநூறு கோடி ரூபாக்களை சுருட்டி ஏப்பம் விட்டது என்று கூறி, அதைப் பிரசாரமாக முன்நிறுத்தி, அதன் மூலம் ஆட்சியைக் கைப்பற்றி, அதிகார பீடத்துக்கு வந்த ராஜபக்ஷக்களினால் சீனி வரி விலக்கு மோசடி மூலம் அதிலும் விடப் பல மடங்கு பணம் ஏப்பமிடப்பட்டது. அது மாத்திரமல்லாமல், மத்திய வங்கி அறிக்கைகள், தகவல்கள் மூலம் இப்படி சீனி விற்பனை வாயிலாக சூறையாடப்பட்ட பணம் நல்லாட்சி அரசின்காலத்தில் மத்திய வங்கி பிணைமுறி ஊழல் மூலம் சுருட்டப்பட்ட பணத்தை விட பலநூறு கோடி ரூபா அதிகம் என்பது உறுதிப்படுத்தப்பட்டது.**

**இத்தகைய நிர்வாகச் சிக்கல்கள், ஊழல் விவகாரங்கள் போன்றவற்றால் கலங்கிப் போயிருக்கும் ஆளும் கட்சிக் கூட்டில் உள்வீட்டுச் சர்ச்சைகளும் உச்சம் பெற்றிருக்கின்றன.**

**விமல் வீரவன்ஸ, வாசுதேவ நாணயக்கார, உதய கம்மன்பில, டிரான் அலஸ் போன்ற பங்காளிக் கட்சிக்காரர்கள் ராஜபக்ஷக்களுக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கியிருக்கின்றார்கள். அந்த அரசியல் இழுபறிக்கு குறுகிய காலத்தில் ஒரு தீர்வு கிட்டும் என்ற நம்பிக்கை இல்லை.**

**பொதுத் தேர்தலில் வலிமையோடு அதிகாரத்துக்கு வந்த அரசு இப்போது பல பின்னடைவுகளை எதிர்கொண்டு மக்கள் செல்வாக்கையும் இழந்து வருகின்றது.**

**இந்தப் பின்புலத்தில் மாகாண சபைத் தேர்தலை சந்திக்கும் திராணி ஆளும் தரப்புக்கு அடியோடு கிடையாது என்பதை உள்வீட்டு வட்டாரங்களே உறுதிப்படுத்துகின்றன.**

**முன்னைய நல்லாட்சி அரசு மாகாண சபைத் தேர்தல்களுக்கு முகம் கொடுக்கப் பயந்து அந்தத் தேர்தல்களையே நடத்த முடியாதவாறு சட்டக் குழப்பங்களை ஏற்படுத்தியது என்று குற்றம் சுமத்தியமையோடு, தாங்கள் ஆட்சிக்கு வந்தால் குறுகிய காலத்தில் மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவோம் என்று சூளுரைத்து ஆட்சிக்கு வந்த ராஜபக்ஷக்கள் இப்போது தடுமாறுகின்றார்கள்.**

**இந்த ஆண்டில் மாகாண சபைத் தேர்தல் என்ற பேச்சையே எடுப்பதில்லை எனும் முடிவுக்கு ராஜபக்ஷ ஆட்சிப்பீடம் வந்துவிட்டதாகத் தெரிகின்றது.**

**கோட்டா அரசின் பிரதான அரசியல் சாணக்கியரான பஸில் ராஜபக்ஷ அமெரிக்கா புறப்பட்டுச் சென்றமையும், அடுத்த ஒரு மாதத்துக்கு அவர் களத்தில் இருக்கமாட்டார் என்பதும் மாகாண சபைத் தேர்தல்கள் இவ்வாண்டில் நடக்கவே நடக்கா என்பதைத்தான் நமக்கு உறுதிப்படுத்தி நிற்கின்றன.**

**மாகாணத் தேர்தல்களுக்கு முகம்கொடுக்க அஞ்சுவதில் ரணிலின் நல்லாட்சி அரசுக்கு ராஜபக்ஷக்களின் அரசு இப்போது சளைத்தது அல்ல என்பதுதான் நிஜம்.**

## ரமழானின் பலாபலன்கள் இவ்வுலக மக்களுக்கு நோய்நொடியற்ற வாழ்வை தரட்டும் – அங்கஜன்



ரமழானின் மூலம் கிடைக்கும் உயர் பலாபலன்கள் இவ்வுலக மக்கள் மற்றும் ஏனைய உயிர்கள் அனைத்துக்கும் நோய்நொடியற்ற சுகமான நல் வாழ்வை உரித்தாக்கட்டும் என ரமழான் நன்நாளில் யாழ் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுத்தலைவரும் நாடாளுமன்ற குழுக்களின் பிரதி தவிசாளருமான அங்கஜன் இராமநாதன் வாழ்த்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

புனித ரமழான் மாதத்தில் நோன்புகளை நோற்று ஈதுல் பித்ர் நோன்புப் பெருநாளைக் கொண்டாடும் அனைத்து இஸ்லாமிய சகோதரர்களுக்கும் எனது ஈகைத் திருநாள் வாழ்த்துக்கள்.

உலகெங்கிலும் வாழும் இஸ்லாமியர்கள் ஒருமாத காலம் நோன்பிருந்து புதிய பிறை பார்த்துக் கொண்டாடும் ஈதுல் பித்ர் நோன்புப் பெருநாள் இஸ்லாமிய சமய நாள்காட்டியில் ஒரு முக்கிய நாள்.

இந்த நோன்பு மாதம் சகோதர இனமான முஸ்லிம் சகோதரர்களிடையே சகிப்புத் தன்மை, பொறுமை, அளப்பரிய நற்கருமங்களில் ஈடுபடும் மனோ நிலையை ஏற்படுத்துகிறது.

பகல் முழுதும் பசித்திருந்து இரவு முழுவதும் வணங்கி நின்று பாவங்களைப் போக்கும் ரமழான் மூலம் கிடைக்கும் உயர் பலாபலன்கள் இவ்வுலக மக்கள் அனைவரும் கொரோனா எனும் கொடிய தொற்றில் இருந்து விடுபட்டு சுகமான வாழ்வு வாழ வழி சமைக்கும் என்ற நம்பிக்கையுடன் இவ் நோன்புப் பெருநாள் முஸ்லிம் சகோதரர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சிகரமான நாளாகவும் திருப்புமுனையை ஏற்படுத்தும் நாளாகவும் அமைய வாழ்த்துகிறேன். – என்று தெரிவித்தார்.

## இணுவில் பொது நூலகத்தில் திறன் வகுப்பறை அமைப்பு





இணுவில் பொது நூலக தகவல் தொழில்நுட்ப மையக்கட்டடத்தின் விரிவுரை மண்டபத்தில் திறன் வகுப்பறை கடந்த ஞாயிற்றுக் கிழமைகாலை10மணிக்குஅங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

இராசையா இராசம்மா ஞாபகார்த்த தகவல் தொழில்நுட்ப மையத்தில் மாணவர் கற்றலை மேம்படுத்துவதற்கு லண்டனைச் சேர்ந்த இரட்ணம் பவுண்டேஷன் கலாநிதி இ.நித்தியானந்தனின் நிதி அனுசரணையுடனும் சுன்னாகம் ஸ்ரீ நகையக உரிமையாளர் சி.ஸ்ரீமுருகன், கோண்டாவிலைச் சேர்ந்த சட்டத்தரணி செல்வி ஞான லோஜினி சிவஞானம் ஆகியோரின் இணை ஆதரவில் இணுவிலைச் சேர்ந்தவரும் தற்போது அமெரிக்காவில் வசித்து வருபவரு மான சிவா தர்ம ராஜா பிரதம அதிதியாக கலந்து கொண்டு அங்குரார்ப்பணம்செய்துவைத்துள்ளார்கள்.

பிரதம விருந்தினர் தனது உரையில் –

இணுவையூரில் இவ்வளவு வசதியுடைய நவீன நூலகம் அமைந்திருப்பதையிட்டு பெருமையடைகிறேன் எனத் தெரிவித்தார்.

## வவுனியா கொரோனா சிகிச்சை மையத்தில் 155 நோயாளர்கள் இதுவரை அனுமதிப்பு

வவுனியா, மே 14

வவுனியா பொருளாதார மத்திய நிலையத்தில் 200 கட்டில்களைக் கொண்டதாக அமைக்கப்பட்ட சிகிச்சை நிலையத்தில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் உட்பட 155 நோயாளர்கள் அனுமதிக்கப்பட்டுள்ள சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

நாட்டில் கொரோனாத் தொற்று தீவிரமாக அதிகரித்து வரும் நிலையில் நாட்டின் பல பகுதிகளிலும் கொரோனா சிகிச்சை மையங்களை அமைக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அந்தவகையில் வவுனியா பொருளாதார மத்திய நிலையம் கொரோனா சிகிச்சை மையமாக மாற்றப்பட்டு கடந்த புதன்கிழமை இரவு 11.00 மணி தொடக்கம் நோயாளர்கள் உள்வாங்கப்பட்டனர்.

வவுனியா பல்கலைக்கழக மாணவர்கள் 31நபர்களும், வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த 2 நபர்களும், கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்த 122 நபர்களும் என 155 ஆண் கொரோனா நோயார்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான மூன்று நேர உணவுகள், மற்றும் ஏனைய வசதிகளை வன்னி இராணுவத்தினர் முன்னெடுத்துள்ளமையுடன் அவர்களுடைய சுகாதாரம், மருத்துவம் போன்ற வசதிகளை வவுனியா சுகாதாரப் பிரிவினர் முன்னெடுத்து வருகின்றனர். (100)

## மாகாணங்களுக்கு இடையே பயணக் கட்டுப்பாடு: குறுக்கு வழியில் எல்லை தாண்டுவோர் கைதாவர்

### அஜித் றோஹண கடும் எச்சரிக்கை விடுப்பு

இலங்கையில்மாகாணங்களுக்கு இடையே பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுள்ள நிலையில், மாகாண எல்லைகளில் பாதுகாப்பைப் பலப்படுத்துவதற்குப் பாதுகாப்புத் தரப்பினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

மாகாணஎல்லைகளின்ஊடானஅனைத்து வீதிகளிலும் வீதித் தடைகளை அமைத்துப் பொலிஸாரும், இராணுவத்தினரும் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர் என்று பொலிஸ் பேச்சாளர் அஜித் றோஹண ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

இந்தக் காலப்பகுதியில் அத்தியாவசிய சேவைகளுடன் தொடர்புடையவர்கள், அரச மற்றும் தனியார் அலுவலகங்களின் ஊழியர்கள் தமது சேவை அடையாள அட்டையைக் காண்பித்து மாகாண எல்லைகளின் ஊடாக பயணிக்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.எவ்வாறாயினும் தனிப்பட்ட தேவைகளுக்காக செல்வோர், உறவினர் வீடுகள், சுற்றுப் பயணங்கள் உள்ளிட்ட அத்தியாவசிய மற்ற பயணங்களை மேற்கொள்வோருக்கு மாகாண எல்லைகளைத் தாண்ட அனுமதி வழங்கப்படாது என்றும் அவர் கூறியுள்ளார்.

குறுக்கு வழிகளின் மூலம் மாகாண எல்லைகளைக் கடந்து செல்வோர் மற்றும் சட்ட விரோதமான முறையில் மாகாண எல்லைகளுக்குள் நுழைவோருக்கு எதிராக குற்றவியல் மற்றும் தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பொலிஸ் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

# தனிமைப்படுத்தல் மீறிய 448 பேர் கைதாகினர்

நேற்று (புதன்கிழமை) தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 448 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடக பேச்சாளரும் பிரதி பொலிஸ் மா அதிபருமான அஜித் றோஹண தெரிவித்துள்ளார்.

அதனடிப்படையில் இதுவரையான காலப்பகுதியில் 8 ஆயிரத்து 747 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் 30 ஆம் திகதி முதல் இன்று வரையான காலப்பகுதியிலேயே குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# கொவிட் தொற்று விவகாரம் அரசு மக்களை சாடுகிறது!

## ஹர்ஷ டி சில்வா குற்றச்சாட்டு

அரசாங்கம் பொறுப்புடன் செயற்படத் தவறியமை காரணமாகவே கொரோனாத் தொற்று அதிகரிக்க வழி வகுத்தது என எதிர்க்கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

கண்டியில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷடிசில்வா இவ்வாறு தெரிவித்தார்.

அரசாங்கம் பொறுப்புடன் நடந்துகொள்ளாத நிலையில் தற்போது மக்களைக் குற்றம் சாட்டுகிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

# 2 ஆம் கட்டமாக எந்தவகை தடுப்பூசியும் செலுத்தலாமா?

## கம்மன்பிலவின் கருத்து உறுதிப்படுத்தப்படவில்லை என்கின்றார் சுதர்ஷினி

இரண்டாம் கட்டமாக எந்தவொரு தடுப்பூசியையும் பயன்படுத்த முடியும் என அமைச்சர் உதய கம்மன்பில அறிவித்திருந்தபோதும், சுகாதார அதிகாரிகள் இது வரை இந்த விடயத்தில் எந்த உறுதிப்பாட்டையும் அடையவில்லை என அறிந்துகொள்ள முடிகின்றது.

இந்த விடயம் தொடர்பாகக் கருத்து வெளியிட்டுள்ள ஆரம்ப சுகாதார இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே, இலங்கையில் இருவேறு தடுப்பூசியை செலுத்திக்கொள்வது தொடர்பாக சோதனைகள் எவையும் நடத்தப்படவில்லை எனக் கூறினார்.

மேலும் வெளிநாடுகளில் நடத்தப்படும் ஆராய்ச்சி தொடர்பாக இதுவரை தங்களுக்கு எந்த உறுதிப்பாடும் கிடைக்கவில்லை என்றும் ஆரம்ப சுகாதார இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே சுட்டிக்காட்டினார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்திருந்த அமைச்சர் உதய கம்மன்பில, வெவ்வேறு தடுப்பூசியை பயன்படுத்த முடியும் என துறைசார் விசேட நிபுணர்களை மேற்கோளிட்டு அறிவித்திருந்தார்.

இதேவேளை கடந்த மாதம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்திருந்த தொற்றுநோயியல் பிரிவின் பிரதானி வைத்தியர் சுதத் சமரவீர, கொவிஷீல்ட்டைப் பெற்றவர்களுக்கு இரண்டாவது தடுப்பூசியாக வேறு தடுப்பூசியை வழங்குவதற்கான சாத்தியம் தொடர்பாகப் பரிசீலிக்க முடியும் எனக் கூறியிருந்தார்.

இருப்பினும் சர்வதேச அளவில் நடத்தப்பட்ட தடுப்பூசியை கலந்து செலுத்துவதற்கான சாத்தியம் குறித்த ஆராய்ச்சியின் முடிவுகளுக்கு சுகாதார அமைச்சு தொடர்ந்தும் காத்திருக்கிறது.

பெப்ரவரியில், ஒக்ஸ்போர்ட் – அஸ்ட்ராஜெனெகா



தடுப்பூசியை பைசர் – பயோஎன்டெக் தடுப்பூசியுடன் கலந்து சோதிக்க இங்கிலாந்து ஒரு சோதனையைத் தொடங்கியது.

அத்தோடு ஒக்ஸ்போர்ட் – அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசி மற்றும் ரஷ்யாவின் ஸ்பூட்னிக் வி தடுப்பூசி ஆகியவற்றின் கலவையைப் பார்க்கவும் சோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்நிலையில் ஒக்ஸ்போர்ட் – அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசியின் முதல் டோஸ் பெற்றவர்கள் எம்.ஆர்.என்.ஏ தடுப்பூசியிலிருந்து இரண்டாவது டோஸைப் பெறலாம் என்று ஜேர்மனியும் பிரான்ஸும் பரிந்துரைத்துள்ளன எனக் கூறப்படுகிறது.

ஒக்ஸ்போர்ட் – அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசியால் ஏற்படலாம் என்று சந்தேகிக்கப்படும் அரிய இரத்த உறைவு ஏற்படும் அபாயத்தைத் தவிர்ப்பதற்காக பைசர் – பயோஎன்டெக் அல்லது மாடர்னா தடுப்பூசிகள் மாற்றாக பயன்படுத்தலாம் என அறிவிக்கப்பட்டு எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

# 12 ஆம் ஆண்டு நினைவேந்தல் நினைவு சுகாதார நடைமுறைகளுடன் நடக்குமா?

முள்ளிவாய்க்கால் படுகொலையின் 12 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு வழமைபோன்று, திட்டமிட்டபடி, முள்ளிவாய்க்கால் முற்றத்தில் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி நடைபெறுமா என்றநிலைதற்போது ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் கடந்த புதன்கிழமை முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக் கட்டமைப்பு நினைவேந்தல் தொடர்பான அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தது.

இந்நிலையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தூபி தற்போது இடித்தழிக்கப்பட்டுள்ளது. ஆகையினால் நினைவேந்தல் நடைபெறுமா என்ற அச்சம் எழுந்துள்ளது.

கடந்த புதன்கிழமை நினைவேந்தல் கட்டமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையின் முழுவிவரம் வருமாறு:–

முள்ளிவாய்க்கால் முற்றத்தில், ‘முள்ளிவாய்க்கால் தமிழர் அடக்குமுறைக்கெதிரான எழுச்சி மையம் அடக்குமுறைக்கெதிரான விடுதலைப் போராட்டங்கள் அணுகுமுறை சார்ந்து பின்னடைவுகளைச் சந்திக்கின்றனவே தவிர, விடுதலை பெறும் வரை ஓய்ந்துவிடுவதில்லை என விடுதலைப் போராட்ட வரலாற்றியல் எமக்குக் கற்பித்திருக்கின்றது.

முள்ளிவாய்க்காலும் இதற்கு விதிவிலக்கல்ல முள்ளிவாய்க்கால் நினைவுதினம் கடந்த காலம் தொடர்பானது மட்டுமல்ல, எதிர்கால அடக்குமுறைக்கெதிரான இயங்கியல் தொடர்பானது. கொத்துக் கொத்தாய் இறுதிப்போரில் கொல்லப்பட்ட எமது இரத்த உறவுகளை, அவர்களது கனவுகளைச் சுமந்து கனத்து நிற்கின்றது முள்ளிவாய்க்கால் மண்.

மே 18 நினைவேந்தல் தமிழ் இனப்படுகொலை நீதிக்கான ஒரு தசாப்தத்தைக் கடந்திருந்தாலும், இலக்கை எட்டும் வரைக்கும் தொடர்ந்து பயணிப்போம் என்ற வாஞ்சை ஈழத்தமிழர்களை ஒருங்கிணைக்கின்றது. எமது வளங்களை ஒன்றிணைத்து, கடந்த கால பட்டறிவிலிருந்து பாடங்களைக் கற்றுக் கொண்டு புதிய உத்திகளைக் கையாண்டு எதிர்காலத்தை எதிர்கொள்ள முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் அழைப்புவிடுக்கின்றது.

சிங்கள – பௌத்த அரசு முள்ளிவாய்க்கால், இனப்படுகொலையை நிராகரித்து, இறுதிப்போரை பயங்கரவாதத்துக்கெதிரான யுத்தமாக சித்திரித்து வந்துள்ளது. பயங்கரவாதத்துக்கெதிரான யுத்தமாக சித்திரிப்பதன் மூலம் பாரிய இனப்படுகொலையை நியாயப்படுத்தி வந்துள்ளது.

இறுதிப் போரை சிங்கள பௌத்தத்துக்குக் கிடைத்த வெற்றியாகப் பிரதிபலித்து மகாவம்ச வரலாற்றியலில் சிங்கள வரலாற்றியலில், சிங்கள பௌத்த தேச அரச கட்டுமானத்தை இன்னும் இறுக்கமாக முன்னெடுத்து வருகின்றது.

ஒற்றையாட்சிக்குள் மையத்தை வலுப்படுத்துவதன் ஊடாக, அதிகாரப் பரவலாக்கத்தை நீத்து போகச்செய்துதமிழர்களின்அரசியல்கோரிக்கையை வலுவிழக்கச் செய்து வருகின்றது. தமிழர்களின் தாயகமான வடக்கு கிழக்கைத் துண்டாடி, ஆட்புல கட்டுறுதியை உடைப்பதன் வழியாக தாயகக் கோரிக்கையை கேள்விக்குட்படுத்தி வருகின்றது. இராணுவமயமாக்கலை வடக்கு கிழக்கில் செறிவாக்கி அரசிற்கெதிரான எதிர்ப்பை அடக்கிவருகின்றது. ஆயுதங்கள் மௌனிக்கப்பட்ட சூழலில் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையைத் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றது.

பின் முள்ளிவாய்க்கால் அரசியல் வரலாற்றுத் தளத்தில் நினைவு கூரலை சிங்கள அரசு தொடர்ந்தும் ஈழத்தமிழர்களுக்கு மறுத்தே வந்துள்ளது. தமிழர்களின் பண்பாட்டு தார்மீக உரிமையான நினைவுகூரல் பல ஆயிரம் ஆண்டுகளைக் கொண்ட பாரம்பரியம்.

இந்நினைவுகூரலுக்கு முஸ்லிம், பெரும்பான்மை முற்போக்கு அமைப்புக்களுக்கு அழைப்பு விடுப்பதோடு தொடர்ந்து குரல் கொடுத்து நீதிப் பயணத்தில் இணைய அழைக்கப்படுகின்றார்கள்.’ எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# சுகாதாரவிதிகளை மீறி பிறந்தநாள் 14 பேர் தனிமைப்படுத்தப்பட்டனர்!



செங்கலடி பிரதான வீதியில் உள்ள கட்டடத்தொகுதியில் சுகாதார நடைமுறைகளை மீறி பிறந்தநாள் நிகழ்வில் பங்கேற்ற 14 பேர் தனிமைப்படுத்தப்பட்டனர். இந்த விடயம் தொடர்பாகத் தகவலறிந்து கடந்த புதன்கிழமை காலை குறித்த இடத்தை சுற்றிவளைத்த சுகாதாரப் பிரிவினர் மற்றும் பொலிஸார் முகாமையாளருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்துள்ளனர்.

செங்கலடி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எஸ்.தவேந்திரராஜாவின் தலைமையில் ஏறாவூர் பொலிஸாருடன் இந்த சுற்றிவளைப்பு இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அனுமதிக்கப்பட்ட நிகழ்வுகளுக்கான கட்டுப்பாடு பதிவாளர் உட்பட 15 பேருடன் பதிவு திருமணம்

மாகாணங்களுக்கு இடையேயான பயண கட்டுப்பாடு அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில் அனுமதிக்கப்பட்ட செயற்பாடுகள் மற்றும் நிகழ்வுகள் தொடர்பான திருத்தப்பட்ட கட்டுப்பாடுகளை சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

அதன்படி மே 31 வரை திருமண வைபவங்களுக்கு தடைவிதிக்கப்பட்டுள்ளதுடன்திருமண பதிவாளர் உட்பட 15 பேருடன் பதிவுத் திருமணம் செய்ய அனுமதி வழங்கப்படுகின்றது என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. இதேவேளை உயிரிழப்பவர்களின் உடல்களைவைத்தியசாலையில் இருந்து ஒப்படைக்கப்பட்டு 24 மணித்தியாலத்திற்குள் அடக்கம் செய்யப்பட வேண்டும் என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. அத்துடன் இறுதிச் சடங்கில் ஒரே தடவையில் ஆகக்கூடியது 15 பேர் மாத்திரமே பங்குபற்ற முடியும் என்றும் சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

# வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் வைத்தியர், தாதியர் நால்வருக்கு கொரோனா

வவுனியா வைத்தியசாலையில் கடமைபுரியும் வைத்தியர்கள் மற்றும் தாதிய உத்தியோகத்தர்கள் நால்வருக்கு கொரோனாத் தொற்று உள்ளமை உறுதிசெய்யப்பட்டுள்ளது.

வவுனியா வைத்தியசாலையின் நோயாளர் விடுதியில் கடமைபுரியும் வைத்தியர்கள் மற்றும் தாதிய உத்தியோகத்தர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனைக்கான மாதிரிகள் பெறப்பட்டன.

பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில் அவர்களில் நால்வருக்குத் தொற்று இருக்கின்றமை உறுதிசெய்யப்பட்டது.

இதனையடுத்து, குறித்த வைத்தியர்களுடன் தொடர்புகளைப் பேணியவர்கள் தனிமைப்படுத்தப்படவுள்ளமையுடன், தொற்று உறுதியானவர்களை கொரோனா வைத்தியசாலைக்கு மாற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழினத்தின் பதிவை அழிப்பதே அரசின் நீண்டகால செயற்றிட்டம்!

## சாள்ஸ் எம்.பி. குற்றச்சாட்டு



ந.லோகதயாளன்

யாழ்ப்பாணம், மே 14

இலங்கையில் தமிழர்கள் என்ற ஓர் இனம் இருந்ததாக ஒரு பதிவுகள் இருக்கக் கூடாது என்ற வகையில் நீண்ட காலத் திட்டத்தில் அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது என நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ்நிர்மலநாதன் குற்றம் சாட்டியுள்ளார்.

உயிரிழந்த உறவுகளை நினைவு கூறும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தினத்தை தற்போதைய கொரோனாத் தொற்றைக் காரணம் காட்டி குறித்த நிகழ்வை தடுக்கும் முகமாக அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றமையை வண்மையாகக் கண்டிக்கிறேன் என மன்னாரில் உள்ள அலுவலகத்தில் நேற்று வியாழக்கிழமை காலை இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் அவ்வாறு தெரிவித்தார்.

– அவர் மேலும் தெரிவிக்கையில்

தமிழ் மக்களின் உரிமைப் போரின் போது யுத்தத்தில் உயிரிழந்த மக்களுக்கு மே மாதம் 18 ஆம் திகதி முள்ளி வாய்க்காலில் நினைவு கூர்ந்து உறவினர்கள் நினைவேந்தல் நிகழ்வை மேற் கொள்ளுவது வழமை.

ஆனால்யுத்தத்தை வழி நடத்தி எமது மக்களை கொன்ற அரசாங்கம் தற்போது ஆட்சியில் இருக்கின்றது.

அந்த அரசாங்கம் தமிழ் மக்களை முற்று முழுதாக அடக்கி, இலங்கையில் தமிழர்கள் என்ற ஓர் இனம் இருந்ததாக ஒரு பதிவுகள் இருக்கக் கூடாது என்ற வகையில் நீண்ட காலத் திட்டத்தில் செயற்பட்டு வருகின்றது.

அந்த வகையில் தற்போது எதிர்வரும் 18 ஆம் திகதி (மே – 18) யுத்தத்தில் உயிரிழந்த உறவுகளை நினைவு கூரும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தினத்தை தற்போதைய கொரோனாத் தொற்றைக் காரணம் காட்டி குறித்த நிகழ்வைத் தடுக்கும் முகமாக நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது.

கடந்த புதன்கிழமை இரவு மதக் குருக்கள் நினைவுக்கல் ஒன்றை அப்பகுதிக்கு கொண்டு சென்ற போது இராணுவம் குவிக்கப்பட்டதோடு, அங்கு சென்றவர்களும் அச்சுறுத்தப்பட்டனர்.

இந்த நிலையில் கடந்த புதன்கிழமை இரவு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் மேற்கொள்ளும் பகுதியில் உள்ள தீபம் ஏற்றும் கல்லையும் உடைத்து சேதப்படுத்தி உள்ளனர்.

மிகவும் ஓர் அராஜகமாக இனத்தின் ஒரு மனதை மிகவும் நோகடிக்கக் கூடிய ஒரு செயற்பாட்டில் தற்போதைய அரசாங்கமும், பாதுகாப்புத் துறையினரும் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நடவடிக்கைகளை வண்மையாகக் கண்டிக்கின்றோம். சர்வதேச விழுமியங்களுக்கு அப்பாற்பட்ட வகையில் இந்த செயறபாடுகள் இடம்பெற்று வருகின்றன.

தற்போது ஏற்பட்டுள்ள கொரோனாத் தொற்றுக் காரணமாக உடனடியாக இந்த விடயங்களை சர்வதேச ரீதியில், சர்வதேச நாடுகளிடம் முறையிடக் கூடிய சூழ்நிலைகள் இல்லை. எனினும் அவர்களுக்கு நாங்கள் தெரியப்படுத்துவோம்.

தொடர்ச்சியாக எமது மக்களை அடக்கு முறைகளுடன் ஆழ நினைப்பதற்கு முழுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமையை நான் வண்மையாக கண்டிக்கின்றேன். எனினும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் சுகாதார நடைமுறைகளுடன் இடம் பெறும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# இறுதி ஊர்வலத்தில் பயணிக்க அரசாங்கம் ஆரம்பித்துவிட்டது

## சாணக்கியன் எச்சரிக்கை



நாடாளுமன்ற தேர்தல் நிறைவடைந்து ஒரு வருடத்திற்குள்ளேயே தன்னுடைய இறுதி ஊர்வலத்தில் அரசாங்கம் பயணிக்க ஆரம்பித்து விட்டதென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

போரில் உயிரிழந்தவர்களை நினைவு கூர்ந்து முல்லைத்தீவு – முள்ளிவாய்க்கால் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த நினைவேந்தல் முற்றம் சேதப்படுத்தப்பட்டுள்ளமைக்கு கண்டனம் தெரிவித்து வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த ஊடக அறிக்கையில் இரா.சாணக்கியன் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

இந்த அரசாங்கம் தமிழர்களுடைய வரலாறுகளை அழிப்பதுடன் தமிழர்களுக்கு நினைவு கூறும் வாய்ப்பைக் கூட இல்லாமல் செய்யும் செயற்பாட்டைத் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றது.

முள்ளிவாய்க்கால் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த நினைவேந்தல் முற்றம் சேதப்படுத்தப்பட்டுள்ளமையானது இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் எங்களுக்கு இருக்கின்றது.

கடந்த ஒரு சில மாதங்களுக்கு முன்னர், யாழ்.பல்கலைக்கழகத்திலும் இத்தகைய தொரு சம்பவம் அரங்கேறியிருந்தது. ஆனால் அதனை பல்கலைக்கழக உபவேந்தரே மீண்டும் கட்டுவதற்கு உதவினார். இதேவேளை தமிழர்களின் உணர்வுகளை – நினைவு சின்னங்களை இடித்து அழிப்பதன் ஊடாக இல்லாமல் செய்ய முடியாது. இவ்வாறு அழிக்கப்படும் ஒவ்வொரு நினைவுச் சின்னமும், தமிழர்களுடைய மனங்களில் ஒரு புதிய உணர்வை மேலும் வலுப்படுத்தும்.

தமிழர்களுக்கு எதிராக நிகழ்ந்த அநீதியை நாங்கள் ஒருபோதும் மறக்கமாட்டோம். ஆகவே தமிழர்களுடைய உணர்வுகளை அழிக்க, புதிய வழிகளையே இனி தேட வேண்டும். எங்களுடைய உணர்வுகளை எவராலும் அழிக்க முடியாது.

இதேவேளை அரசாங்கத்துடன் இணைந்திருக்கின்ற தமிழ் பிரதிநிதிகளும் கூட இந்த விடயத்தில் கண்டனம் தெரிவிக்க வேண்டியது மிகவும் அவசியமாகும்.

மேலும் யுத்தத்தில் உயிரிழந்த உறவுகளை நினைவு கூருதல் மற்றும் நினைவுத் தூபிகளை இடிக்காமல் பாதுகாத்தல் ஆகியன தமிழ் பிரதிநிதிகளின் முழுப் பொறுப்பாகும்.

நாட்டில் நாடாளுமன்ற தேர்தல் நிறைவடைந்து ஒரு வருடத்திற்குள்ளேயே தன்னுடைய இறுதி ஊர்வலத்தில் அரசாங்கம் பயணிக்க ஆரம்பித்து விட்டது' என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# வெசாக் கொண்டாட்டங்களை வீட்டிலிருந்து மகிழ ஆலோசனை

வெசாக் பூரணை தினத்தை மதவழிபாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து வீடுகளிலிருந்து கொண்டாடுமாறு மகாநாயக்க தேரர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் தொற்றைக் கருத்திற்கொண்டு அவர்கள் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக அறிக்கை வெளியிட்டுள்ள மகா நாயக்க தேரர்கள், விகாரைகள் மற்றும் வெளியிடங்களில் மக்களை ஒன்றுதிரட்டுதல், தானங்கள் வழங்குதல், வெசாக் அழங்கார தோரணைகளை அமைத்தல் உள்ளிட்ட நடவடிக்கைகளை தவிர்க்குமாறும் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

சுகாதாரப் பரிந்துரைகளுக்கு அமைய மக்கள் செயற்பட வேண்டும் எனவும் மகாநாயக்க தேரர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

# முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி இடித்தழிக்கப்பட்டமை நாட்டின் எதிர்காலத்தைக் கேள்விக்குட்படுத்துகின்றது

## சட்டத்தரணி ஸ்ரீகாந்தா விசனம்



முழு நாடும் முகம் கொடுத்து நிற்கும் பாரிய தொற்று நோய் நெருக்கடி நிலைமையிலும், போரில் உயிரிழந்த தமிழ் மக்களின் பெயரால் நிறுவப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவுச் சின்னம் சிதைக்கப்பட்டிருக்கும் சம்பவம் நாட்டின் எதிர்காலம் தொடர்பில் பல்வேறு கேள்விகளை எழுப்பியிருக்கின்றது.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவரும் சட்டத்தரணியுமான ந.ஸ்ரீகாந்தா தெரிவித்துள்ளார்.

சமூகப்பொறுப்பையும் மனிதப்பண்பாட்டையும் மதிக்கும் அனைவரும் இந்தக் காட்டுமிராண்டித்தனமான சம்பவத்தை கண்டிக்க முன்வர வேண்டும்.

தமிழ் மக்களின் உணர்வுகளைக் கொடூரமாக காயப்படுத்தியிருக்கும் இச்சம்பவம் தொடர்பில் அரசாங்கம் என்ன நடவடிக்கையை எடுக்கப் போகின்றது என்பது பகிரங்கமாகத் தெரிவிக்கப்பட வேண்டும் என்று நாம் கோருகின்றோம்.

# இயற்கை மற்றும் சமூகத்துக்கு புத்துயிரளிக்க 'ஹரித்த சவிய' திட்டம் நடைமுறையில்

மனித மக்கள்தொகையின் தடயங்கள் 35 ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவை என்றும், வரலாற்றின் கண்டுபிடிப்புகளின்படி இலங்கை அந்த வரலாற்றின் ஒரு முக்கியமான பகுதி என்றும் கருதப்படுகின்றது. நம் வாழ்வின் ஓர் அங்கமாக மரங்களும் இயற்கையும் இருந்தன, ஆனால் அபிவிருத்தியின் காரணமாக பல மரங்களும் தாவரங்களும் அழிக்கப்பட்டு வரு கின்றன. நமது வருங்கால சந்ததியினருக்கான இயற்கை வளங்களை பாதுகாக்க நாங்கள் ஒருமனதாக பொறுப்பேற்க வேண்டும்.

இந்த நிலையை உணர்ந்த குளோபல் லைஃப்ஸ்டைல் லங்கா, அவர்களின் சமூகப் பொறுப்புக் கடமைகளின் ஒரு பகுதியாக அண் மையில் திம்பிரிகஸ்யாய மற்றும் கொழும்பு நகராட்சிமன்ற அதிகார வரம்பின் பல பகுதிகளில் 'ஹரித்த சவிய'என்ற கருப்பொருளில் மரம் நடும் நிகழ்வுகளை நடத்தியது. இந்த நிகழ்ச்சிகள் ஹெல்ஃப்ஸ்டாஃப் சமூக திருத்த அலுவலகம் மற்றும் திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகத்துடன் கூட்டாக நடத்தப்பட்டன. இந்த குழுத் திட்டங்கள் அபிவிருத்தி அலுவலர் (சமூக திருத்தங்கள்) சஞ்சீவ வன்னியாரச்சியின் ஒருங்கிணைப்பின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டன.



இத் திட்டத்தின் முதல் கட்டம் பெப்ரவரி மாதம் 19 ஆம் திகதி நாகஸ்வத்த குழந்தைகள் மேம் பாட்டு மைய வளாகத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

நிகழ்ச்சியின் இரண்டாம் கட்டம் மார்ச் மாதம் 16 ஆம் திகதி பொரெல்லயில் அமைந்துள்ள பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித்தின் உத்தியோக பூர்வ இல்லமான பேராயர் இல்லத்தில் மேற் கொள்ளப்பட்டது.



நிகழ்ச்சியின் மூன்றாம் கட்டம் மார்ச் மாதம் 30 ஆம் திகதி ஏழு வளாகங்களில் நடைபெற்றது, இது கொழும்பு நகராட்சி மன்ற விளையாட்டு மற்றும் பொழுதுபோக்குத் துறையின் பார்வையில் இருக்கும் கிருலபன சித்துமின்ன மண்டபத்தை மையமாகக் கொண்டு நடத்தப்பட்டது. குளோபல் லைஃப்ஸ்டைல் லங்கா தொடர்ச்சியாக பல திட்டங்களுடன் பங்களிப்புச் செய்துள் ளது. இந்த முயற்சி இயற்கைக்கும் சமூகத்திற்கும் மீளளிக்கும் நோக்குடன் நடத்தப்பட்ட பலதிட்டங்களின் ஒரு பகுதியாகும், எதிர்காலத்திலும் இவ்வாறான திட்டங்கள் தொடரும்.

- வே.வரதசுந்தரம் -

09



# கோணமலை காளி ஆச்சி தரிசிப்போம் வாரீர்!

**இலமென்று இறைஞ்சினோம்
நலம்பல தாராய்
கோணமலைத் தாயே
ஆச்சிநீ காளி!
நல்லார்கண் வறுமையுண்டு
அல்லார்கண் செல்வமுண்டு
ஒன்றும் புரியவில்லை
ஆச்சிநீ காளி!
வைகாசி மாதத்து
நன்னாளிற் பொங்கி
உனைநாம் தொழுவோம்
ஆச்சிநீ காளி!**

இவ்வாறு காளி ஆச்சியைப் போற்றிப் பாடிய அடியார்கள், அம்பாள் செய்யும் அற்புதங்களை அறிந்து வியக்கின்றனர். திருகோணமலை மண்ணின் மங்கையும், பிரபல தமிழ் எழுத்தாளரும், ஓய்வு பெற்ற ஆசிரியையுமான திருமதி பாலேஸ்வரி நல்லரெத்தினசிங்கம் அவர்கள் திருகோணமலை பத்திரகாளி அம்பாள் செய்த சில அற்புதங்களைப் பின்வருமாறு விளக்கியுள்ளார்:-

'பல ஆண்டுகளின் முன்னர் ஒரு சிறு அற்புதம் நடைபெற்றதாக அறியக் கிடக்கிறது. ஆண்டு தோறும் நடைபெரும் நவராத்தி விழாவின் இறுதியில் திருகோணமலையில் கும்பத்தை கோலாகலமாக வீதி தோறும் சுற்றிக் கொண்டாடுவார்கள். அது ஒரு கண் கொள்ளாக் காட்சி. வேற்று இனத்தைச் சேர்ந்த சிறுவன் ஒருவன் அம்மன் சந்நிதி முன்றிலில் வைத்து அந்நிகழ்ச்சியைப் பரிகசித்தான் எனவும், அதனால் அவன் வாய்பேச முடியாமல் பரிதவித்துத் திரும்பவும் பத்திரகாளியைப் பிரார்த்தித்துப் பிராயசித்தம் செய்து பேசக் கூடிய நிலைபெற்றான் எனவும் கூறுகிறார்கள்.

இதேபோல பல ஆண்டுகளுக்கு முன்னர் வேற்று இனத்தைச் சேர்ந்த கணவன் மனைவியர்க்கு அடுத்தடுத்து இரண்டு ஊமைக்குழந்தைகள் பிறக்கவே அவர்கள் பத்திரகாளி அம்பாளுக்கு நேர்த்தி வைத்தனர் எனவும், அதன் பின்னர் பிறந்த குழந்தைகள் பேசும் சக்தி பெற்றிருந்தன எனவும், அதனைத் தொடர்ந்து அத்தம்பதியர் முதலாவது கும்பாபிஷேகத்திற்கு மூலஸ்தான விமான வேலைகளை நிறைவேற்றிக் கொடுத்தார்கள் எனவும் சொல்கிறார்கள்.

இதேபோல நான் மட்டக்களப்புக்குச் சென்றிருந்த வேளை மட்டக்களப்பு ஆசிரிய பயிற்சிக் கல்லூரியின்



ஓய்வு பெற்ற விரிவுரையாளர் ஒருவரைச் சந்தித்தேன். அன்னாரின் கணவர் நோய்வாய்ப்பட்டுப் பேசும் சக்தியை இழந்து, மருத்தவர்கள் கைவிட்ட நிலையில் நண்பர்களின் ஆலோசனையின் பேரில் கேதார கௌரி நோன்புக் காலத்தில் அம்மன் சந்நிதிக்கு வந்து இரந்து கண்ணீர் விட்டு வேண்டி வீட்டிற்குச் சென்ற சமயம் 'பூசை முடிந்து விட்டதா?' என்று பேசும் சக்தியைப் பெற்றுத் தன் கணவர் கேட்டார் எனக் கூறிப் பரவசப்பட்டார்.'

- இவ்வற்புதங்கள் கேட்டு இன்புற்ற அடியார்கள், இக்கோயிலில் நிகழும் திருவிளக்குப் பூசையின் மகிமைபற்றி அறிந்து பக்தியில் ஈடுபடுகின்றனர்.

கன்னியருக்கும், சுமங்கலிப் பெண்களுக்கும் உரிய சிறப்பு வழிபாடு திருவிளக்குப் பூசையாகும். இறைவனை ஒளிவடிவில் காணும் அடியார்கள் திருவிளக்குப் பூசையில் ஈடுபடுவர். திருவிளக்குப் பூசையின் பலனாக சகல மங்களங்களும் கைகூடும்.

திருவிளக்கின் நுனியில் விநாயகர் அமர்ந்துள்ளார். விளக்கின் அடிப்பாகம் தாமரை மலராக அகன்று இருத்தல் பிரம்மாவைச் சுட்டும். விளக்கின் தண்டுப் பாகம் திருமாலைக் குறிக்கும். மேலேயுள்ள அகல் பாகம் கெங்காதரனைக் குறிக்கிறது. திரிவைக்கும் கண்கள் ஐந்தும் பஞ்சமுகத்தைக் குறிக்கும் என்பர் ஞானியர்.

தீபத்தின் மஞ்சள் நிறச்சுடர் மகாலக்குமியையும், சுடரில் காணும் நீலநிறத்துப் பிரகாசம் கலைமகளையும், சுடரின் சூடு துர்க்காதேவியையும் குறிப்பதாக சமய அறிஞர்கள் விளக்குவர். இவ்வழிபாட்டினால் கன்னிப்பெண்களுக்கு மாங்கல்ய பாக்கியமும், சுமங்கலிளுக்கு சகல மங்களங்களும் கைகூடும்.

**அன்பே தகளியாய் ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை இடுதிரியாய் - நன்குருகி
ஞானச் சுடர்விளக்கு ஏற்றினேன்
ஞானத் தமிழ்புரிந்த நான்.**

- இவ்வாறு பூதத்தாழ்வார் பாடுவார். 'ஊனுடம்பு வீடாக, உள்ளம் தகளியாக, உணர்வு நெய்யாக, உயிர் திரியாக, ஞானம்பெற்ற ஒளியை ஏற்றினால் இறைதரிசனம் கிட்டும். மங்களம் மனையெங்கும் தங்கும்' - என்பது இப்பாடலின் பொருள்.

திருவிளக்குத் தொண்டர் கலியநாயனார் சரிதை திருவிளக்கு வழிபாட்டினை நன்குவிளக்கும். அவர் திருவொற்றியூர் கோயிலின் உள்ளேயும், வெளியேயும் பெருந்தொகையாக திருவிளக்குகளை ஏற்றித் திருவருட் பணியாற்றினார்.

அவர் ஒருகால் ஏழையானர். செக்காட்டி, எண்ணெய் பெற்றுக் கோயிலில் திருவிளக்கேற்றினார். வறுமை மேலும் அதிரிக்க, எண்ணெய் வாங்கி விளக்கேற்றித் திருத்தொணடு செய்யமுடியாமை கண்டு அவர் மனமுடைந்தார்.

ஒருநாள் திடசங்கற்பத்துடன் ஒருமுடிவு எடுத்தார். தனது இரத்தத்தை எண்ணெயாக ஊற்றி விளக்குகளை ஏற்றுவதே அவரது முடிவாகும். கோயிலைச் சுத்தம்செய்து அகல்விளக்குகளை ஒழுங்காக வரிசைப் படி அமைத்தார். திரிகளை ஒவ்வொரு விளக்கிலும் இட்டார். 'விளக்கிடும் தொண்டு இல்லையேல் அடியேனும் இல்லை' - இப்படி உறுதிபூண்டார்.

வாளெடுத்துத் தன்தொண்டையை அரிந்தார். தன்னுதிரத்தால் விளக்கேற்ற முனைந்தார். இறைவன் கலியனாரின் கையைப் பிடித்துத் தடுத்தார். அவருக்கு முக்தி கொடுத்தார். இங்கு திருவிளக்குப் பூசையின் சிறப்பினைக் காண்கிறோம்.

வேதாரணிய திருத்தலத்தில் வேதபுரீஸ்வரன் கோயிலில் நிகழ்ந்த அற்புதம் திருவிளக்கு வழிபாட்டின் சிறப்பினை எடுத்தியம்பும். அத்திருக்கோயிலின் திருவிளக்கு ஒளிவிட்டு எரியவில்லை. அதுவோ நெய்யூற்றி ஏற்றிய திருவிளக்கு. நெய்யின் மணத்தை நுகர்ந்த எலி நெய்யினை உண்டுமகிழும் நோக்குடன் திருவிளக்கில் ஏறித்தகளியை அடைந்தது.

நெய்யினை உண்ணும்போது, எலிதன் மூக்கினால் எதிர்பாராத விதத்தில் திரியை நகர்த்தியது. தூண்டியது. திருவிளக்குத் தீபமோ பிரகாசமான ஒளியுடன் எரியத் தொடங்கியது. திருவிளக்கு ஏற்றும் எண்ணம் எலிக்கு இருக்காதபோதும், இறைவன் அவ்வெலிக்கு பெரும்பேறு அளித்தான். அடுத்த பிறப்பில் அது மகாபலி சக்கரவர்த்தியாகப் பிறந்தது.

அப்பரடிகள் தனது தேவாரத்தில் இச்செய்தியைப் பாடுவது காண்போம்:

**நிறைமறைக் காடுதன்னில் நீண்டெலி தீபந்தன்னை
கறைநிறத்தெலி தன்மூக்குச் சுட்டிடக் கனன்று தோன்ற
நிறைகடல் மண்ணும் விண்ணும் நீண்டவான் உலகமெல்லாம்
குறைவறக் கொடுப்பார்போலும் குறுக்கை வீரட்டானரே!**

இத்தகைய விழுப்பம் சார்ந்த திருவிளக்குப் பூசையைப் பூசகர்கள் செவ்வனே ஆற்ற மங்கையர்கள் நோன்பு நோற்றல் இத்தலத்தின் மகிமையன்றோ!

**அன்னை! அன்னை! என்றால் போதும்
அவளே வருவாள் பாலூட்ட
என்னை உன்னை ஏத்தி எடுப்பாள்
இன்பத் தமிழில் தாலாட்ட
மன்னும் கங்கைக் காசிக்கரையில்
மலர்ந்தது மாதா அரசாட்சி
பின்னும் என்ன உலகம் முழுவதும்
பெரும்பேர் சக்தி விசாலாட்சி!**

(கவிஞர் கண்ணதாசன்)



# கொவிட்டைக் கையாள்வதில் ராஜபக்ஷ அரசு படுதோல்வி

## சாடுகின்றார் முருத்தெட்டுவே ஆனந்த தேரர்



கொவிட் வைரஸ் நிலைமைகளைக் கையாள்வதில் ராஜபக்ஷ அரசு படுதோல்வியடைந்துள்ளது. தகுதியான சுகாதார அதிகாரிகளை ஓரங்கட்டிவிட்டு இராணுவமும், தகுதி இல்லாத அதிகாரிகளும், அமைச்சர்களும் அரச நிர்வாகத்தைக் கையில் எடுத்துள்ள காரணத்தால் இந்தியாவின் நிலை இலங்கைக்கும் ஏற்படும் அச்சம் உள்ளது என அபயராம விகாரையின் விகாராதிபதி முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்துள்ளார்.

ஆட்சியாளர்களை நம்பிய பொதுமக்கள் இறுதியாக வீதிகளில் இறந்து கிடக்கும் நிலையை உருவாக்கிவிட வேண்டாம் எனவும் அரசை அவர் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

‘கொவிட் விடயத்தில் அரசு இப்போதும் பொய்யான தரவுகளையே கூறுகின்றது. ஆனால், அமெரிக்காவின் வொஷிங்டன் பல்கலைக்கழக அறிக்கையில் இலங்கையில் செப்ரெம்பர் மாதமளவில் 20 ஆயிரத்துக்கும் அதிகமான கொவிட் மரணங்கள் ஏற்படும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தத் தரவுகள் அரசிடம் இருந்தாலும் அவர்கள் அதனை வெளிப்படுத்த மறுக்கின்றனர்.

இப்போதுள்ள நிலைமையில் நாட்டை முறையாக நிர்வகிக்காது விட்டால், ஊழியர்களை முறையாக வழங்க முடியாவிட்டால், குறைந்தது இரண்டு வாரங்களேனும் நாட்டை முடக்காது விட்டால் பாரதூரமான விளைவுகளைச் சந்திக்க நேரிடும்.

ஜனாதிபதி, பிரதமர், சுகாதார அமைச்சர் போன்றவர்கள் தூரநோக்குடன் இது தொடர்பாகச் சிந்திக்காது போனால் இந்த நாடும் இந்தியாவைப் போன்றதொரு நிலைமையை அடையும். அவ்வாறான நிலையொன்றை உருவாக்க எம்மால் இடமளிக்க முடியாது. – எனத் தெரிவித்துள்ளார்.

# செங்கலடி – மாவடிவேம்பு விபத்தில் வான் சேதம்!





ஏறாவூர் – செங்கலடி, மாவடிவேம்பு பிரதான வீதியில் இடம்பெற்ற விபத்தில், வான் ஒன்று முற்றாக சேதமடைந்துள்ளது என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

கடந்த புதன்கிழமை இரவு, ஓட்டமாவடி பகுதியிலிருந்து ஏறாவூர் நோக்கி சென்ற வாகனம், வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியோரத்திலிருந்த மின் கம்பத்தில் மோதியே விபத்து ஏற்பட்டுள்ளது.

மேலும் விபத்துக்கு, சாரதியின் அதிவேகமும் தூக்க கலக்கமுமே காரணமென பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

குறித்த சம்பவத்தில் வானில் பயணித்த இருவருக்கும் எந்தவொரு பாதிப்பும் ஏற்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இலங்கையில் கொரோனாவால் அதிகம் பாதிப்படையும் சிறுவர்

## கொழும்பில் 15 பேர் வைத்தியசாலைகளில்

கொழும்பு, மே 14

இலங்கையில் கொவிட் வைரஸால் பாதிக்கப்பட்ட 15 சிறுவர்கள் கொழும்பு ஐ.டி.எச். வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என வைத்தியசாலையில் பணிப்பாளரும் வைத்தியருமான ஹசித அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

ஆனாலும் சிறுவர்கள் எவருக்கும் கடுமையான பாதிப்புகள் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, புதிய கொவிட் அலை மூலம் சிறுவர்களே அதிகமாகப் பாதிக்கப்படுகின்றனர் என வைத்தியர் ஹசித அத்தநாயக்க தெரிவித்தார். மேலும் கொவிட் நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை தற்போது அதிகரித்து இருக்கின்றன எனவும் அவர் கூறினார்.

தற்போது கொவிட் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்ததன் காரணமாக, ஐ.டி.எச். வைத்தியசாலையில் கடுமையான இட நெரிசலில் ஏற்பட்டுள்ளது. எனினும் நிலைமை சிறப்பாக முகாமைத்துவம் செய்யப்பட்டு வருவதாக வைத்தியர் மேலும் தெரிவித்தார்

# வவுனியாவில் கொரோனா விழிப்புணர்வுப் பதாதைகள்



கொவிட் - 19 மூன்றாம் அலையின் தாக்கம் வவுனியாவில் வேகமாக அதிகரித்து வரும் நிலையில், கொவிட் தொடர்பான விழிப்புணர்வு பதாகைகள் வவுனியாவில் நிறுவப்பட்டுள்ளன.

இந்நடவடிக்கை கடந்த புதன்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

மக்கள் மத்தியில் இது தொடர்பான விழிப்புணர்வுகளைச் சுகாதாரத் திணைக்களத்துடன் இணைந்து பல்வேறு அமைப்புக்களும் முன்னெடுத்துள்ளன. அந்தவகையில், கொவிட் நோயிலிருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்வோம்.

பொது இடங்களுக்குச் செல்லும் போது முகக்கவசம் அணிவோம் எனப் பொறிக்கப்பட்ட பதாகைகள் வவுனியா புதிய பஸ் நிலையம் மற்றும் மக்கள் அதிக நடமாட்டம் உள்ள பகுதிகளில் நிறுவப்பட்டது.

இதன் ஆரம்ப நிகழ்வில் வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளர் வைத்தியர் எம்.மகேந்திரன், வைத்தியர் லவன் மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டுள்ளனர்.

# இரு குழுக்கள் கடும் மோதல்; மட்டுநகரில் இருவர் வைத்தியசாலையில்!

மட்டக்களப்பு, மே 14

மட்டக்களப்பு- சந்திவெளி பகுதியில் இரு குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தில், இருவர் வாள்வெட்டுக்கு இலக்காகி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

கடந்த புதன்கிழமை மாலை, சந்திவெளி - பாலையடித்தோனா பகுதியில் இரு குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் 21 வயது மற்றும் 22 வயதுடைய இளைஞர்களே படுகாயமடைந்துள்ளனர்.

குறித்த சம்பவம் நிகழ்ந்தமைக்கு தனிப்பட்ட பிரச்சினை மற்றும் கருத்து மோதல் ஆகியவையே காரணமென பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்நிலையில் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கிழக்கு மாகாண ஆளுநருக்கு கொரோனாத் தொற்று உறுதி

கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் கொவிட் வைரஸ் தொற்றுக்குள்ளாகியுள்ளார்.

இதனை அவர் கடந்த புதன்கிழமை ஊடகங்களிடம் உறுதிப்படுத்தியுள்ளார்.

திருகோணமலை அரச அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்புக்குப் பிறகு, இரண்டு நாள்களுக்கு முன்னர் அன்டிஜன் பரிசோதனைக்கு உட்பட்டார் எனவும், இதன் முடிவுகள் கிடைக்கப் பெற்றதையடுத்து தொற்று உறுதியானது எனவும் அவர் கூறியுள்ளார்.

இதையடுத்து கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் தனிமைப்படுத்தல் விதிமுறைகளுக்கு அமைய தனது இல்லத்திலேயே தனிமைப்படுத்திக் கொண்டுள்ளார்.

இதேவேளை, கடந்த சில நாள்களாக அவருடன் நெருக்கமான தொடர்பைப் பேணியவர்கள் மற்றும் பணியாளர்கள் தனிமைப்படுத்தலுக்காக அனுப்பப்பட்டுள்ளனர். கிழக்கு மாகாணத்தில் கொவிட் வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த நிலையில் நான் துரதிர்ஷ்டவசமாக, கொவிட் தொற்றுக்குள்ளாகியுள்ளேன் என்று அவர் கவலையுடன் தெரிவித்துள்ளார்.

இரு நாள்களுக்கு முன்பு கிழக்கு மாகாணத்தில் கொவிட் பரவலைக் கட்டுப்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறும், உடனடியாக அமுலாகும் வகையில் கிழக்கு மாகாணத்தின் மாவட்டங்களுக்கு இடையே பயணக் கட்டுப்பாடுகளை விதிக்குமாறும் கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத், பாதுகாப்பு படையினருக்கு அறிவுறுத்தியிருந்தார்.

# தினம் ஒரு விவசாயத் தகவல்

## குழி முறை கூட்டுப்பசளை தயாரிக்கும் போது கவனிக்கப்பட வேண்டியவை

01. குழியை அமைக்கும் நிலமானது உயர்வான பகுதியாக இருக்க வேண்டும்.
02. ஆகக் கூடியது ஒரு வாரத்தினுள் குழியானது நிரப்பப்பட்டுவிடல் வேண்டும்.
03.எச்சந்தர்ப்பத்திலும் குழியானது இறுக்கமடையாமல் பார்த்துக்கொள்ளல் வேண்டும்.
04. குழியின் ஆழமானது 1m ஐ விட அதிகரிக்கக் கூடாது.
05.பழைய கூட்டெருவை பயன்படுத்துவதனால் நுண்ணுயிர்களின் எண்ணிக்கையும் வளர்ச்சியும் அதிகரிக்கும்.
06.சாணக்கூழ் தயாரிக்கும் போது சிறிதளவு சாம்பல் மாட்டுச்சிறுநீர் சேர்க்க வேண்டும்.



ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி

இக் கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். ‘இனப்படுகொலை’, ‘இனச்சுத்திகரிப்பு’ ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப் பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில் மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



அங்கம் 03

- செல்லத்துரை ரவீந்திரன் -

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

**10. அப்படியானால், இந்த நாடாளுமன்ற வாதங்கள் இனப்படுகொலையை உறுதிப்படுத்தமாட்டாவா?**

அவை மாத்திரம் அதற்கு காணாது. மேலும் அதிக சாட்சியங்கள் ஓர் இனபடுகொலையை நிரூபிக்க தேவையாகும். இதில் நோக்கம் (Intention) என் பது மிக துல்லியமாக தெளிவுபடுத்தப் படவேண்டும்.

அதேசமயம் இவற்றை அடுத்த இவை பற்றிய எங்களது நடவடிக்கைகள், நடத்தை என்பனவும் கேள்விகளுக்கு உட்படுத்தப்படும்.

உதாரணமாக சுதந்திர காலத்திலிருந்து எமது நடத்தையில் நாம் ஓரளவுக்கு இணைந்து நடந்து, ஓர் ஐக்கிய இலங்கையை கட்டி எழுப்பும் எண்ணத்தையே சர்வதேசத்துக்கு காட்டி வந்தோம். சொல்வதற்கும் செய்வதற்கும் எவ்வளவோ வித்தியாசம் உண்டு. இவை ஒரு தீர்க்க தரிசனத்தின் அடிப்படையில் உறுதியாக வர வேண்டும்.

அன்றைய தமிழரசுத் தலைவர்கள் 1970இல் சிறிமாவோ அமைத்த குடியியல் யாப்பு மன்றத்தை பகிஷ்கரிப்பதாக அறிக்கைகள் கொடுத்தார்கள். ஒரு இனப்படுகொலையில் சிங்கள அரசு ஈடுபடுவதால் தாம் அதைப் பகிஷ்கரிக்கிறோம் என்ற சொல்லாடலோ நடத்தையோ இவற்றில் இருக்கவில்லை. ஆனால் அதே வருடம் தமிழரசின் காரியதரிசி நாடாளுமன்ற உறுப்பினர் கதிரவேற்பிள்ளை தாங்கள் அதை வரவேற்பதாகவும், தமிழரசு நாட்டுப் பிரிவினையை எதிர்ப்பதாகவும், சமஷ்டி முறையையே நாடுவதாகவும், மேலும் பெரும்பான்மையினர் புத்தபொருமானின் போதனைகளுக்கமைய தமிழர்களை நீதியாக நடத்துவார்கள் என நம்புவதால் தாங்கள் அழைப்பை ஏற்கிறோம் என்று அறிவித்து பங்குபற்றினார்கள்.

1972இல் யாப்பு தமிழர் கேட்டவை எல்லாவற்றையும் ஒதுக்கி, பௌத்தத்துக்கு முன்னுரிமை கொடுத்து, சிங்களத்தை அரச கருமமொழியாக்கி, அதிகாரப் பரவலை அர்த்தமற்றதாக்கி, அவை எல்லாம் மத்தியிலேயே முற்று முழுதாக அடைபட்டிருக்க வேண்டும் என்று அமைக்கப்பட்டது. இப்படியான நடத்தைகளே தொடர்ந்தது நடந்தன, அவற்றுக்கு நாங்களே உடந்தையானோம்.

**11. ஆனால் இப்படியான ஓரங்கட்டல்கள் இனப்படுகொலையின் நோக்கத்தை (Intention) தெளிவுபடுத்தவா?**

இவை அந்த எண்ணத்தை நோக்கத்தை பிரதிபலிக்கும் குறியீடுகளே. ஆயின் அவற்றை வெளிக்காட்டும் மேலதிக நடவடிக்கைகள் உருவாக வேண்டும். ஆனால் 1972இன் குடியியல் யாப்பின் அடிப்படையிலும் எம் தலைவர்கள் நாடாளுமன்றத்திலேயே குறியாக இருந்தார்கள்.

ஏதோ பார்த்து ஏதோ பெற்று விடலாம், இணைந்து வாழலாம் என்ற மனோ பாவத்தில் இனஅழிப்பு என்ற விடயம் முனைப்புடன் முன்னெடுக்கப்படவில்லை.

ஆனால் அவற்றை உலுக்கும் சில சம்பவங்கள் நடந்தன. முதலாவது 10 ஜனவரி 1974இல் சர்வதேச தமிழாராய்ச்சி மா நாட்டில் பொலிஸாரின் அத்துமீறிய நடவடிக்கைகளால் பொது மக்கள் 9 பேர் கொல்லப்பட்டனர். பலர் காயப்படுத்தப்பட்டனர். அரசாங்கம் அதையொட்டி பொலிஸாருக்கு எதிராக ஏதும் நடவடிக்கை எடுக்கவோ சம்பவங்களை ஆராயவோ மறுத்தது. அதனால் யாழ் நகரின் பொதுமக்கள், சிவில் சமூகத்தின் ஊடாக ஒரு குழுவை அமைத்து இவற்றை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பித்தனர். அதையும் அரசு நிராகரித்தது.

தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட இன்னல்கள் முறையாக ஆதாரப்படுத்தப்பட்டதின் முன்னோடி நடவடிக்கை இதுவே.

இதைத் தொடர்ந்து இளைஞர்கள் கொதித்து அரசிற்கு எதிராக இயங்கத் தொடங்கினார்கள் வன்முறையில் நம்பிக்கை கொண்டார்கள். 5ஜூன் 1974இல் சிவகுமாரன் என்ற இளைஞன் தன்னுயிரை நீத்து ஒரு வரலாற்றுத் தீயை மூட்டினான்.

**12. அவற்றின் தாக்கம் என்ன?**

தமிழ் அரசியல் கட்சிகள் ஓரணியில் திரண்டு மே மாதம் 14ஆம் திகதி 1976 ஆண்டு, வட்டுக் கோட்டை தீர்மானத்தை நிறைவேற்றினர். அந்த தீர்மானம் தமிழர்கள் தனியரசாகத் தங்களை தாங்களே ஆண்ட பழைமையை சொல்லியது. இன்றைய நிலையில் சிங்கள அரசு தமிழ் தேசத்தினதும் மக்களினதும் தனித்துவ அடையாளங்களையும் வாழ்வுரிமைகளையும் அழிக்க முனைந்து நிற்பதால் தமிழ் மக்கள் தமது இறைமையை மீட்டு ஒரு சுதந்திர தமிழீழத்தை நிறுவ உறுதி கொள்வதாக சர்வதேசத்துக்கு அறிவித்தது. அந்த உறுதி இலங்கையிலிருக்கும் தமிழ் தேசமும் அதன் வாழ்வாதாரங்களும் வாழ்வியலும் முற்றாக ஒழிக்கப்படக்கூடாது என்பதற்கான நிர்ப்பந்தமான செயற்பாடு என்றும் சுட்டிக்காட்டியது.

இந்த தீர்மானத்தின் மூலம்தான், தமிழ் இனத்தின் தேசம், வாழ்வாதாரங்கள், வாழ்வியல் ஆகியன முற்றாக அழிக்கப்படுவதை நிறுத்தி, பாதுகாக்க இறைமையுள்ள, சுதந்திர தமிழீழம் அமைவது தவிர்க்க முடியாததாகிறது என்ற இனவழிப்பின் இனப்படுகொலையின் இனச் சுத்திகரிப்பின் பரிமாணங்களும் உணர்வுகளும் சர்வதேசத்திற்குக் கட்டியம் கூறப்பட்டது.

ஆயினும் வழமைபோல அந்த பிரச்சாரத்தால் 1976 ஆம் ஆண்டு தேர்தலில் மகத்தான வெற்றி பெற்று சிங்கள தேசத்திற்கு எதிரான தமிழ் தேசத்தின் பிரதிநிதிகளாக நாடாளுமன்றத்தை அலங்கரித்தனர் நம்மவர்கள். அந்த மகத்தான வெற்றிகளால், வட்டுக்கோட்டை தீர்மானம் மக்களால் பெரும்பான்மையாக ஏற்றுக் கொள்ளப்பட்டது என ஆதாரப்படுத்தினர்.

தமிழர்கள் இனப்படுகொலைக்கு அல்லது இனவழிப்புக்கு அல்லது இனச் சுத்திகரிப்புக்கு ஆளாகின்றார்கள் என்பதற்கு மக்கள் கொடுத்த அந்த ஆணை போதாதா?

அந்த ஆணை பாதிக்கப்பட்ட ஒரு மக்களின் பிரதிபலிப்பே அன்றி ஒரு கோர்ட்டின் தீர்ப்பாகவே, இல்லாவிடின் சர்வதேசத்தின் அங்கீகாரமாகாது. அதுவும் ஒரு சாட்சியமாகும்.

**13. வட்டுக்கோட்டை தீர்மானத்தின் பின்னர் நடந்த அட்டூழியங்கள்?**

பல நடந்துள்ளன. சுருக்கச் சொன்னால் 1977ஆம் ஆண்டின் இனக் கலவரம், அதன் பின்னணிகளில் இருந்தவர் யார் என்று ஓர் ஆணைக்குழு விளங்க அதன் எதிரொலியாக மீண்டும் ஓர் பயங்கரமான இனக் கலவரம் 1983இல் நடந்தது. அதைத்தொடர்ந்து இந்தியாவின் ஊக்குவிப்பில் இளைஞர்களின் ஆயுதப் போராட்டம், அதன் மனிதாபிமானமற்ற விளைவுகள் என்று ஒவ்வொன்றாக வளர்ந்து கடைசியில் முள்ளிவாய்க்காலில் வந்து முடிந்தது. இவை எல்லாம் ஓர் இனத்தின் இருப்பை வாழ்வாதாரங்களை நசுக்க எடுக்கப்பட்ட மனிதாபிமானத்தை மீறிய செயல்கள் என்ற அசைக்க முடியாத சாட்சியங்கள் எங்களிடம் மட்டுமல்ல சர்வதேசத்திடமும் உண்டு. இவை எல்லாம் நீதித் தாராசில் நிறுக்கப்பட்டு, சாட்சியங்களின் அடிப்படையில் சிறிலங்கா அரசின் விளக்கங்களையும் உள்வாங்கித் தீர்மானிக்கப்படும்.

**14. ஆனால் சுமந்திரன், ஓர் இனப்படுகொலைக்கான ஆதாரங்கள் போதியளவு எங்களிடையே இல்லை என்று சர்வதேசம் கூறுவதாகச் சொல்கிறாரே?**

அபிப்பிராயங்கள் பல இருக்கலாம். ஆனால் ஆதாரங்கள் போதியளவு எங்களிடையே இல்லை என்பதோ, அதை முன்னெடுத்து வாதிடக்கூடிய ஒரு வழக்கு அல்லது அரசியல் கோரிக்கையை முன் வைத்து நகர்த்த எமக்கு வாய்ப்பு இல்லை என்பதோ சரியானதல்ல. உண்மை என்னவென்றால், இருக்கின்ற அவ்வளவு சாட்சியங்களையும் கால வாரியாக கோவைப்படுத்தி, அவற்றை ஆராய்ந்து ஒருமித்த குரலில் எமது அரசியல் தலைவர்கள் இன்று வரை சமர்ப்பிக்கவில்லை.

எங்கெங்கோ இருந்து, யார் யாரோ தருணதற்கு தக்க மாதிரி கோஷங்கள் போடுகிறோம். அதில் அரசியல் நடந்துகிறோம். கஜேந்திரகுமார், நீதியரசர் விக்னேஸ்வரன் போன்றோரின் கூற்றுக்கு இணங்கி சிறிலங்காவை ICC க்குப் பாரப்படுத்த வேண்டும் என்ற தீர்மானத்தை சுமந்திரனும் சேர்ந்து அனுப்பினார்.

இது அரசியலேயொழிய ஒரு மனச் சுத்தியான நிலைப்பாடல்ல.

அதன் எதிரொலியாக சிவாஜிலிங்கம், தான் ஆதாரங்களை எல்லாம் எடுத்து செப்ரெம்பர் 2021 முன் இனப்படுகொலை என நிரூபிப்பேன் என்று சவால் விடுகிறார்.

ஓர் இதய சுத்தியான நம்பிக்கையில் அவரால் இது சொல்லப்பட்டாலும், இது தன் வயலிலும் பக்கத்து வயல்களிலும் விளைந்த பூசணிகளை ஏற்றிக் கொண்டு சந்தையில் வியாபாரத்துக்கு வைக்கும் வியாபாரமல்ல.

எதையும் காலத்தே பயிர் செய்து பிரயோசனம் காணாத எங்களது மனோபாவத்தைத் தான் இது காட்டுகின்றது. ஆனாலும் இந்த 12 ஆண்டுகளும் அதற்கு முன்னும் இனப்படுகொலை பற்றியும் ICC பற்றியும் பேசிவந்த கஜேந்திரகுமாரிடமிருந்து எந்தச் செய்தியும் இல்லை. நீதியரசர் விக்கினேஸ்வரனும் சுமந்திரனது அபிப்பிராயத்துக்கு, எதுவும் சொல்லவில்லை. அப்படியானால் இவர்கள் இருவரும் கூட சுமந்திரனது கருத்தை ஆதரிக்கிறார்களா அல்லது இரண்டு ஆமைகளாக அசையாமல், ஆடாமல் இருந்து அவர்களோடு சேர்ந்தியங்கும் புலம் பெயர் அமைப்புக்களின் ஏற்பாட்டால் ஆயிரம் முட்டைகள் போடக் கருக்கட்டுகிறார்களா? தெரியவில்லை.

ஆனால் உண்மை என்னவென்றால் இந்த 12 வருடங்களிலாவது எமது அரசியல் தலைவர்கள் எந்த சாட்சியங்களைத் தேடினார்கள், ஆராய்ந்தார்கள், அதற்காக எந்த அமைப்புக்களை அந்தப் பணிகளுக்காக அமர்த்தினார்கள் என்பதும் புரியவில்லை. விளாசுகின்றார்கள். கேட்கிறோம். வெளிப்படையாக எதுவுமேயில்லை. நாங்கள் கேட்டதெல்லாம் அரசியல் தலைவர்களோடு இணைந்த சில புலம்பெயர் அமைப்புகள் அதற்கான ஆயத்தங்களைச் செய்கிறார்கள், அதற்கான வியூகங்கள் உண்டு என்பதே.

கோழிகள் கூரையேறிக் கூவுகின்றன. ஒரு முட்டையாவது கிடைப்பதாகத் தெரியவில்லை. கூட்டிக் கழித்துப் பார்த்தால், இந்தச் சந்தர்ப்பவாதங்களாலும் அசமந்தப் போக்குகளாலும் அரசியலாலுமே நாங்கள் பலவற்றை இழந்துள்ளோம்; இழக்கின்றோம்.

இன்னுமொருமுறையில் பார்த்தால், ஒரு கையில் இனப்படுகொலை என்ற போஸ்டருடன் போராட்டம். அடுத்த கையில் மாகாண சபைக்கு யார் முதல்வராவது என்ற பதவி போராட்டங்களும் காய் நகர்த்தல்களும் தான் முக்கியம் பெறுகின்றன.

இங்கேதான் சர்வதேசம் வட்டுக்கோட்டை தீர்மானம் மாதிரி இனப்படுகொலையும் அரசியல் கோஷங்களுக்காக செய்கிறோம் என்று அபிப்பிராயப்படுகிறார்கள்.

பிரபாகரனை சர்வதேசம் திரும்ப பார்த்ததற்கும், இவர்களை ‘ஏதோ கண்டோம், கேட்டோம்’ என்று பதில் சொல்லி அனுப்புவதற்குமுள்ள வித்தியாசம் முதலில் எங்களுக்கு மனதில் உறுதி வர வேண்டும். அதனை நடைமுறைப்படுத்த கூடிய தலைவர்கள் உருவாக வேண்டும். அவர்களைக் கொண்டு காரியம் பெற்றுகொள்கிற செயற்திறன் வேண்டும்.

பிள்ளையார் கதைக்கு பிடிக்கப்படும். தெய்வங்களின் உருவப் பொம்மைகள், கடைசியில் தண்ணீரில் விடப்படுகின்றன, கரைந்து விடுகின்றன.

நவராத்திரி பொம்மைகள், கொலுவில் வீற்றிருந்து அலங்கரிக்கின்றன.

எதனை சிலையாக வைத்து நம்பிக்கையுடன் வணங்குவது?

(தொடரும்....)

காலைக்கதிர் Kalaikkathir

# அழிக்கப்பட்ட நினைவுச் சின்னத்தை முள்ளிவாய்க்காலில் மீளமைப்போம்

## இன விடுதலையையும் நிலைநாட்டுவோம்; தமிழரசின் தலைவர் மாவை திடசங்கற்பம்

**முள்ளிவாய்க்காலில் அமைக்கப்பட்டிருந்த நினைவுச் சின்னம் இரவோடிரவாய் அழிக்கப்பட்டதை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் துணைத் தலைவருமான மாவை சேனாதிராஜா வன்மையாகக் கண்டித்துள்ளார்.**



இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:-

இன்று காலையில் மேலும் ஒரு நெஞ்சை உலுக்கும் செய்தி கிடைத்தது. மே-18 முள்ளிவாய்க்கால் நினைவிடத்தில் நிலைநாட்டுள்ள சின்னங்கள் சிதைக்கப்பட்டுள்ளமையும், நிலை நாட்டவென விருந்த நினைவுக்கல்லும் காணாமல் ஆக்கப்பட்டுவிட்டமையும் எம் நெஞ்சை உலுக்கும் கொந்தளிக்க வைக்கும் நடவடிக்கைகளும் ஆகும்.

நேற்று இரவோடிரவாய் முள்ளிவாய்க்கால் முற்றத்தைச் சுற்றி இராணுவம் குவிக்கப்பட்ட நிலையில் இக்கொடிய நடவடிக்கைகள் இடம்பெற்றிருக்கின்றன. இந்த நாகரிகமற்ற எம் இனத்தின் ஆன் மத்தையே அழிக்கும் செயலை அனைவரும் நாகரிகமுள்ள உலகமும் கண்டித்தே ஆகவேண்டும். இதற்கான பொறுப்பை அரசு ஏற்றுப் பதிலளிக்க வேண்டும்.

இந்நாட்டில் தமிழினப் பிரச்சினை தீர்க்கப்படாமையினால் இடம்பெற்ற நீதிக்கான 70 ஆண்டுகள் போராட்டத்தின் உச்சநிலையில் இலட்சக்கணக்கான உயிர்கள், மனிதகுலம் அழிக்கப்பட்டமையை நினைவுகூரும் பண்பாடு, நாகரிகம், அந்த உறவுகளுக்கும் நீதிக்காய்ப் போராடும் திடசங்கற்பங் கொண்ட மக்களுக்கும் உள்ள உரிமையையும் அழிக்க எடுக்கும் இத்தகைய நடவடிக்கைகளை நாம் அனைவரும் எதிர்த்தே ஆகவேண்டும்.

முள்ளிவாய்க்கால் மே - 18 நினைவு கூரும் அதேவேளை கொரோனா வைரஸ் - 19 தீவிரமடைந்துவரும் நிலையில் சுகாதார விதிமுறைகளை ஏற்று அமைதி வழியில் மக்கள், உறவுகள் வாழும் இடங்களில் நினைவுகூருவதற்கே அறிவித்தல் கொடுக்க எண்ணியிருந்தோம். கிறிஸ்தவ மத ஆயர்களும் அவ்வாறானதொரு காத்திரமான ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளனர். எவ்வாறாயினும் இனவிடுதலைப் போரில் அழிக்கப்பட்ட எம்மினத்தின் உறவுகள் தம் உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தவும் கண்ணீர் விட்டழுது ஆறுதல் பெறவும் உயிர்நீத்த உறவுகள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதற்கும் உள்ள மனிதகுல நாகரிகத்தை உரிமையை நாமுள்ள வரை நிலைநாட்டவும் திடசங்கற்பம் கொள்வோம்.

அரசு அதன் இராணுவம், பௌத்தர்களும் இவ்வாரம் முல்லைத்தீவில் குருந்தூர் மலைப்பிரதேசத்தில் சைவ மக்கள் வழிபாட்டுத்தலத்தில் கொரோனா வைரஸ் கட்டுப்பாடுகளையும் மீறி ஒன்று கூடி விடங்களும் அழிக்கப்படுகின்றன.

நாம் இந்நாளில் தொடர்ந்தும் மனித குலத்தின் தமிழ் மக்களின் பண்பாடு, நாகரிகத்தை நிலைநாட்டுவோம் எனவும், அழிக்கப்பட்ட நினைவிடத்தை - நினைவுச் சின்னங்களை மீள அமைப்போம் எனவும், இன விடுதலையை நிலைநாட்டுவோம் எனவும் திடசங்கற்பம் கொள்வோம் - என்றுள்ளது.

## 'கொரோனா'வை ஒழிக்க இலங்கைக்கு உதவுங்கள்

### பிரிட்டன் தூதுவரிடம் சஜித் வேண்டுகோள்



இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் சாரா ஹல்டனுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் இடையே விசேட சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இந்தச் சந்திப்பு நடைபெற்றுள்ளது.

இதன்போது இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்த உதவியை வழங்குமாறு பிரிட்டன் தூதுவரிடம் எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கடந்த சில நாள்களாக வெளிநாடுகளின் இலங்கைக்கான தூதுவர்களைச் சந்தித்து உதவிகளைக் கோரி வருகின்றார்.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் இலங்கைக்கான பதில் பிரதிநிதி மருத்துவர் ஒலிவியா நிவேராஸ், இலங்கைக்கான கனேடியத்தூதுவர் டேவிட் மெக்கினொன் மற்றும் இலங்கைக்கான ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கர் ஆகியோருடனும் சஜித் பிரேமதாஸ சந்திப்புகளை மேற்கொண்டிருந்தார்.

## சகல பிரஜைகளுக்கும் தடுப்பூசி வழங்கப்படும்

### இராணுவத் தளபதி உறுதி

கொழும்பு, மே 13

இலங்கையில் கொரோனாத் தடுப்பூசி அவசியமான அனைவருக்கும் தடுப்பூசி வழங்கப்படும் என்று கொரோனாத் தடுப்பு ஜனாதிபதி செயலணியின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

நாட்டின் கொரோனாத் தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பாக கொழும்பு ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்குப் பல்வேறு நாடுகளில் இருந்தும் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்வதற்கான கலந்துரையாடல்கள் நடைபெற்று வருகின்றன என்றும் அவர் கூறியுள்ளார்.

நாட்டின் தடுப்பூசித் தேவைக்கு ஏற்ப எதிர்வரும் மாதங்களில் இரண்டாம் தொகை தடுப்பூசி கிடைக்கவுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவின் ஸ்புட்னிக் வி தடுப்பூசி 13 லட்சமும், அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசி 6 லட்சமும் கொள்வனவு செய்யவுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## தமிழகத்திலிருந்து தாயகம் திரும்பியவர்களுடன் நெருங்கிப் பழகிய நால்வர் தனிமைப்படுத்தலுக்கு

(ந.லோகதயாளன்)

தமிழகத்தில் இருந்து படகு வழியாகத் தாயகம் திரும்பியவர்களுக்கு உதவி புரிந்து நெருங்கிப் பழகிய நான்கு பேர் கடற்படையினரால் கொரோனாத் தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தியாவில் அதிகரிக்கும் கொரோனாத் தாக்கம் காரணமாக தினமும் ஆயிரக்கணக்கானோர் மரணிப்பதையடுத்து தமிழகத்தில் தங்கியுள்ள ஈழ அகதிகள் உயிர் அச்சம் காரணமாக மீண்டும் தாயகம் நோக்கிப் படையெடுக்கின்றனர்.

இந்தநிலையில், கடந்த ஒரு வாரத்துக்குள் 3ஆவது சம்பவத்தில் ஒரு படகு மூலம் ஊடுருவியவர்களைப் படகில் அழைத்து வந்தவர்கள், கூடப்பழகியவர்கள் என நால்வரைக் கைதுசெய்த கடற்படையினர் அவர் களையும் காரைநகரில் உள்ள இடைத்தங்கல் முகா மில் தடுத்து வைத்து கொரோனா பரிசோதனைக்கு உட்படுத்துகின்றனர்.

இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்ட நால்வருடன் சேர்த்து மொத்தம் 9 பேர் தற்போது காரைநகரில் தங்கியுள்ள அதேநேரம் வவுனியா சிறைச்சாலையில் நால்வர் இருப்பதும் குறிப் பிடத்தக்கது.

## கொரோனாவால் மேலும் 11 பிரதேசங்கள் முடக்கம்

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றின் தீவிரத்தையடுத்து மேலும் 3 மாவட்டங்களைச் சேர்ந்த மேலும் 11 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் இன்று காலை முதல் மறு அறிவித்தல் வரை தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

புதிதாக தனிமைப்படுத்தப்பட்டுள்ள பிரதேசங்கள் வருமாறு:-

கம்பஹா மாவட்டத்தின், திவுலப்பிட்டிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாலுகஹவெல கிராம சேவகர் பிரிவு, காலி மாவட்டத்தின், அஹங்கம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கரந் துங்கொடை கிராம சேவகர் பிரிவு, கொவிய பான கிராம சேவகர் பிரிவு, கஹவன்னகம கிராம சேவகர் பிரிவு, தொம்மங்கொட கிராம சேவகர் பிரிவு, ஹபராதுவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட லுனுமோதர கிராம சேவகர் பிரிவு, பொனவிஸ்டா கிராம சேவகர் பிரிவு, கட்டுகுருந்த கிராம சேவகர் பிரிவு, இரத்தினபுரி மாவட்டத்தின் பெல்மடுல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தெனகவக்க பாதகட கிராம சேவகர் பிரிவு, திப்பிடிகல கிராம சேவகர் பிரிவு, குருவிட்ட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குருவிட்ட கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட தெல்கமுவ பிரிவின் நகரப் பகுதி.

### குற்றக் கும்பல் தலைவர்

## 'கொஸ்கொட தாரக' சுட்டுப் படுகொலை!

குற்றக் கும்பல் தலைவர் 'கொஸ்கொட தாரக' எனும் தாரக பெரேரா விஜேசேகர பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்துள்ளார்.

மேல் மாகாண வடக்கு குற்றவியல் பிரிவின் தடுப்புக் காவலில் இருந்தபோதே, இவர் பொலிஸாரின் துப்பாக்கிச்சூட்டில் கொல்லப்பட்டுள்ளார்.

ஆயுதங்கள் சிலவற்றை மீட்பதற்காக மீரிகம பிரதேசத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டபோது,

தாரக பெரேரா பொலிஸாரைத் தாக்க முயன்றார் எனவும், அதன்போது பொலிஸார் துப்பாக்கிச்சூடு மேற்கொண்டனர் எனவும் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கொஸ்கொட தாரகவின் பாதுகாப்பு குறித்து கவனம் எடுக்குமாறு, அவரது சட்டத்தரணி பொலிஸ்மா அதிபருக்கு நேற்று கடிதமொன்றை அனுப்பி வைத்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

## மேலும் 448 பேர் மாட்டினார்கள்!

நாட்டில் முகக்கவசம் அணியாமை உட்பட தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 448 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் றோஹண தெரிவித்தார்.

இதனடிப்படையில், கடந்த ஒக்டோபர் மாதம் 30ஆம் திகதி முதல் இதுவரையான காலப்பகுதி வரை தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய குற்றச் சாட்டில் 8 ஆயிரத்து 747 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, மேல் மாகாணத்தில் விசேட சுற்றிவளைப்புகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் கூறினார்.

# ரமழான் மூலம் அர்த்தப்படும் மத விழுமியங்களை அனைவரது நலன்களுக்காகவும் பயன்படுத்துக!

## வாழ்த்துச் செய்தியில் பிரதமர் மஹிந்த



ரமழான் நோன்புக் காலத்தை நிறைவுசெய்து உலக ளாவிய ரீதியில் பரந்து வாழும் இஸ்லாமியர்களுடன் இணைந்து ஈதுல் பிதர் திருநாளை கொண்டாடும் இலங்கை வாழ் முஸ்லிம்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

– இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ரமழான் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

புனித ரமழான் தொடர்பில் பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள வாழ்த்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள் ளவை வருமாறு–

இஸ்லாத்தின் புனித நூலான அல் – குர்ஆனில் பரிந்துரைக்கப்பட்டுள்ள வகையில் அனுஷ்டிக்கப்படும் ஒரு மாத கால ரமழான் நோன்பின் மூலம், மத ரீதி யாகவும் ஆன்மீக ரீதியாகவும் உலகிற்கு மிக முக்கியம ான செய்தி வெளிப்படுத்தப்படுகிறது.

நோன்புக் காலத்தில் பிறரது பசி பற்றிய சரியான புரிந்துணர்வுடன், விட்டுக் கொடுப்பு மிகுந்த ஒரு சமூகத் தைக் கட்டியெழுப்ப இஸ்லாமியர்கள் எவ்வித உயர்வு தாழ்வுமின்றி ஒன்றிணைவார்கள் என்பது எனது நம்பிக்கையாகும்.

மத ரீதியான முறையான போதனைகளைக் கற்ற ஒழுக்கம் மிகுந்த இஸ்லாமியர்கள் வரலாறு முழுவதும் இலங்கை சமூகத்தில் பிற இனங்கள் மற்றும் மதங் களுடன் ஒருவருக்கொருவர் மிகுந்த நட்புடன் செயற்பட்டுள்ளனர்.

இந்த நம்பிக்கையை குறைமதிப்பிற்கு உட்படுத்தாமல் முன்னோக்கிச் செல்ல முஸ்லிம் மக்களுக்கு உள்ள அவசியத்தை ஓர் அரசாங்கமாக நாம் புரிந்துகொண் டுள்ளோம் என்பதை இன்று போன்றதொரு தினத்தில் நினைவுபடுத்த வேண்டும்.

உலகளாவிய ரீதியில் பரவிவரும் கொவிட் தொற்று நிலைமை காரணமாக கடந்த ஆண்டு போன்றே இந்த வருடமும் ஈதுல் பிதர் சடங்குகளைப் பாரியளவிலான பண்டிகையாகக் கொண்டாட முடியாத போதிலும், இது சார்ந்த மதச் சடங்குகளை சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்றி நிறைவேற்றுவார்கள் என்று நம்புகிறேன்.

நோன்புக் காலத்தில் சுகாதார நடைமுறைகளுக்கு அமைய வழிபாட்டுக்காக பள்ளிவாசல்களுக்கு செல்லாது தமது வீடுகளில் இருந்தவாறு சமய சடங்குகளை மேற் கொண்டு வழிபாட்டில் ஈடுபட்ட அனைத்து இஸ்லாமியர் களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

முழு உலகமும் இவ்வாறானதொரு தொற்று நெருக் கடிக்கு முகங்கொடுத்துள்ள காலத்தில் ரமழான் நோன் பின் மூலம் அர்த்தப்படுத்தப்படும் மத விழுமியங்களை அனைவரின் நலனுக்காக பயன்படுத்துமாறு உங்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்.

உங்கள் அனைவருக்கும் இன்றைய ஈதுல் பிதர் திருநாள் இறை ஆசீர்வாதத்துடனான, நோய் அச்ச மற்ற அமைதியும் மகிழ்ச்சியும் நிறைந்த சிறந்த நாளாக அமைய பிரார்த்திக்கின்றேன். – என்றுள்ளது.

## ஹற்றனில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள போடைஸ் தோட்ட மக்கள் ஆர்ப்பாட்டம்

ஹற்றன் போடைஸ் தோட்டத்தில் தனிமைப்படுத்தப் பட்டுள்ள மக்கள் தமக்கான நிவாரணம் வழங்கப் படுவதில்லை எனக் குற்றம் சுமத்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஹற்றன் – டயகம பிரதான வீதியில் அமைந்துள்ள தோட்ட தொழிற்சாலைக்கு முன்பாக இந்தப் போராட்டம் கடந்த புதன்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

அந்த தோட்டத்தில் கொவிட் தொற் றாளர்கள் சிலர் அடையாளம் காணப் பட்டமையைத் தொடர்ந்து என்பீல்ட் கிராம சேவையாளர் பிரிவுக்கு உட்பட்ட போடைஸ் தோட்டத்துக்கு பயணத் தடை விதிக் கப்பட்டது.

இவ்வாறான நிலையில் புதன் காலை பயணத் தடை நீக்கப்பட்டதை தொடர்ந்து போடைஸ் தோட்ட மக்கள் இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

எனவே கடந்த பல நாள்களாகத் தனிமைப்படுத் தப்பட்டிருந்த தாம் தோட்டத் தொழிலையும் இழந்து வருமானமில்லாது அவதிப்படுகின்றனர் என ஆர்ப் பாட்டக்காரர்கள் தெரிவிக்கின்றனர்.

எவ்வாறாயினும் மேற்படி பிரச்சினைகளுக்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்து பேசி தீர்வைப் பெற்றுத் தருவோம் என ஹற்றன் பொலிஸார் தெரி வித்தனர்.

எனவே நடைமுறையில் உள்ள தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி ஒன்று கூட முடியாது எனவும் பொலிஸார் ஆர்ப்பாட்டகாரர்க ளுக்கு அறிவித்தனர். இதனைத் தொடர்ந்து ஆர்ப்பாட்டத்தை மக்கள் கைவிட்டனர்.

## முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை தடுப்பதன் ஊடாக இறந்த பிள்ளைகளின் நினைவுகூரல் மறுக்கப்படுகிறது

### ஜே.வி.பியின் யாழ். அமைப்பாளர் கண்டனம்

முள்ளிவாய்க்கால் நினைவேந் தலை தடுப்பதன் ஊடாக இறந்த பிள்ளைகளின் நினைவுகூரல் மறுக்கப்படுகிறது துறைமுக நகரத் தைச் சீனாவுக்கு வழங்குவதால் எமது எதிர்கால சந்ததியும் பாதிப் படையும் என மக்கள் விடுதலை முன்னணியின் யாழ் மாவட்ட அமைப்பாளர் இராமலிங்கம் சந் திரசேகர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள கட்சி அலுவலகத்தில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே இராமலிங்கம் சந்திரசேகர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.



கொரோனாவைக் கட்டுப்படுத் துவதில் அரசாங்கம் தோல்வி கண்டுள்ளது. கொரோனாவைக் கட்டுப்படுத்த அரசு எதிர்க் கட்சிகளின் உதவியை நாடவேண்டும் அல்லது தங்களது கட்சியிலே இருந்த புத்தி ஜீவிகளையாவது இணைத்துக் கொள்ளவேண்டும். துறைமுக நகரத்தை அரசு சீனாவுக்கு தாரை வார்த்துள்ளது. இதனால் எமது எதிர்கால தலைமுறையினருக்கு பாதிப்பு ஏற்படும். பஸில் ராஜபக்ஷ வெளிநாட்டுப் பிரஜை என்பதை மீண்டும் காட்டியுள்ளார். இக்கட்டான சூழ்நிலையில் நாட்டைவிட்டு வெளி யேறியுள்ளார். முள்ளி வாய்க்கால் நினைவேந்தலை தடுப் பதனூடாக தமது இறந்த பிள்ளைகளை வணங் குவதை அரசு தடுக்கிறது.

## சுகாதார விதிமுறைகளை மீறிச் செயற்பட்ட சிறுவர் பராமரிப்பு நிலையம் தனிமைப்படுத்தல்

வவுனியாவில் சுகாதாரப் பிரிவினரின் அறிவுறுத்தல் களை மீறிச் செயற்பட்ட சிறுவர் பராமரிப்பு நிலையத்துடன் கூடிய கல்வி நிலையத்தை சுகாதாரப் பிரிவினர் முற்றுகையிட்டுள்ளமையுடன், குறித்த நிலையம் தனி மைப்படுத்தப்பட்டுள்ளது.

சுகாதாரத் துறையினரால் இந்த நடவடிக்கை கடந்த புதன்கிழமை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கொவிட் அச்சுறுத்தல் காரணமாக அரசாங்கத்தால் பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், மேலதிக வகுப் புக்கள், தனியார் வகுப்புக்கள் என்பவற்றை மறு அறி வித்தல் வரை நடத்துவதற்குத் தடை விதிக்கப்பட்டுள் ளது.

இந்நிலையில் குறித்த அறிவுறுத்தல்களை மீறி சில இடங்களில் கல்வி நிலையங்கள் இடம்பெறுகின்றன என சுகாதாரப் பரிசோதகர்களுக்குக் கிடைத்த முறைப் பாட்டையடுத்து வவுனியா பட்டானிச்சூர் பகுதியில் அமைந்துள்ள சிறுவர் பராமரிப்பு நிலையத்துடன் கூடிய கல்விநிலையத்தைசுகாதாரப்பிரிவினர்முற்றுகையிட்டனர்.

இதன் போது சிறுவர் பராமரிப்பு நிலையம் சுகாதார விதிமுறைகளை மீறிச் செயற்பட்டதன் பிரகாரம் கடந்த 12.05.2021 புதன்கிழமை தொடக்கம் எதிர்வரும் 25.05.2021 ஆம் திகதி வரையிலான 14 நாள்கள் சுகாதாரப் பிரிவினரால் குறித்த நிலையம் தனிமைப் படுத்தப்பட்டுள்ளது.

## பொலிஸ் உத்தியோகத்தர் 12 பேருக்குக் கொரோனா

### வவுணதீவு பொலிஸ் நிலையம் பூட்டு

மட்டக்களப்பு – வவுணதீவு பொலிஸ் நிலையத்தில் பணி புரியும் பொலிஸார் 12 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனால் வவுணதீவு பொலிஸ் நிலையம் தற் காலிகமாக மூடப்பட்டுள்ளதுடன், சந்தேகத்தின் பேரில் பொலிஸார் 32 தனிமைப்படுத்தப்பட்டுள் ளனர்.

கடந்த செவ்வாய்கிழமை மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில், பொலிஸ் உத்தியோ கத்தர் ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது.

அதனைத் தொடர்ந்து கடந்த புதன்கிழமை, 37 பொலிஸாருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் 12 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் வவுணதீவு பொலிஸ் நிலையத்தை தொற்று நீக்கியதன் பின்னர் மீண்டும் திறப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது எனத் தெரி விக்கப்படுகின்றது.

இதேவேளை வவுணதீவு பொதுமக்கள், தங்க ளுக்கான பொலிஸ் சேவையினை தற்காலிகமாக ஆயித்தியமலை பொலிஸ் நிலையத்தில் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நாடளாவிய தனிமைப்படுத்தல் ஊரடங்கு மூலம் கட்டுப்பாடுகளை அமுல்படுத்துமாறு கோரிக்கை

*எதிர்வரும் நீண்ட வார இறுதியில் 80 - 90 வீதம் உடல் ரீதியான தூரத்தைப் பேணும் வகையில் நாடளாவிய தனிமைப்படுத்தப்பட்ட ஊரடங்கு உத்தரவு மூலம் கட்டுப்பாடுகளை அமுல்படுத்து மாறு அரச மருத்துவ அதிகாரிகள் சம்மேளனம் அரசாங்கத்திடம் கோரியுள்ளது.*

*ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு இது தொடர்பில் கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது.*

*தொற்றுநோயின் நிலையான கட்டுப்பாட்டை உறுதி செய்வதற்காக, ஒழுங்காக செயல்படுத்தப்பட்ட சோதனை மூலோபாயம் அவசியம்.*

*அத்துடன் மாகாணங்களுக்கு இடையிலான கட்டுப்பாடுகள் ஆகியவற்றை உன்னிப்பாக மதிப் பீடு செய்ய வேண்டிய அவசியம் தொடர்பாகவும் அரச மருத்துவ அதிகாரிகள் சம்மேளனம் தமது கடிதத்தில் வலியுறுத்தியுள்ளது.*

## கொரோனாவால் மன்னாரில் மக்கள் நடமாட்டம் கட்டுப்பாட்டில்

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக மாகாணங்களுக்கு இடையில் போக்கு வரத்துக்கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளமை யினால் மன்னாரில் மக்கள் நடமாட்டம் மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் காணப்படு கின்றது எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் சில வர்த்தக நிலையங்க ளும் மூடப்பட்டுள்ளமையுடன் அத்தியாவசிய தேவைகள் தவிர்ந்த ஏனைய தேவைக ளுக்கு நகரப் பகுதிக்கு வருவதை மக்கள் தவிர்த்துள்ளனர்.

மேலும் இப்பகுதியிலுள்ள மக்கள், பொதுப்போக்குவரத்தையும் தவிர்த்துள்ளனர்.

இதேவேளை சுகாதார நடைமுறைகளை மக்கள் பயன்படுத்துகிறார்களா என்பதை அவதானிக்க முப்படையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

# ‘எதிர்க்கட்சியிலிருந்து சுவாசம்’ திட்டம் தலைவர் சஜித் தலைமையில் ஆரம்பம்!



இலங்கையிலுள்ள வைத்தியசாலைகளில் சுகாதார வசதிகளை மேம்படுத்தும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் இந்தத் திட்டத்துக்கு ‘எதிர்க்கட்சியிலிருந்து சுவாசம்’ எனப் பெயரிடப்பட்டுள்ளது. நாட்டில் கொவிட் பரவல் தீவிரமடைந்ததைத் தொடர்ந்து, வைத்தியசாலைகளில் சுகாதார வசதிகள் குறைவடைந்து வருகின்றன.

ஐக்கிய மக்கள் சக்தி மருத்துவமனைகளுக்குச் சுகாதார உபகரணங்களை வழங்கி வந்தது எனவும், அதன் புதியதொரு திட்டமே நேற்று கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது எனவும் எதிர்க்கட்சித் தலைவரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

# விரைவில் எரிவாயுத் தட்டுப்பாடு?

இலங்கையில் எரிவாயு விநியோகிக்கும் லிட்ரோ மற்றும் லாஃவ்ஸ் ஆகிய நிறுவனங்கள் இரண்டும் இதுவரையில் பாரிய நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ளன என அறிய முடிந்துள்ளது.

உலக சந்தையில் எரிவாயுவின் விலை பெருமளவில் அதிகரித்துள்ளமை காரணமாக, இந்த இரு நிறுவனங்களும் பாரிய நிதி நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ளன. இந்நிலையில் எதிர்வரும் காலப்பகுதியில் நாடளாவிய ரீதியில் எரிவாயு சிலின்டர்களுக்கு தட்டுப்பாடு ஏற்படுவதற்கான வாய்ப்புகளும் காணப்படுகின்றன என அறிய முடிந்துள்ளது.

இந்த நிலையை கவனத்தில் கொண்டு வர்த்தக விவகார அமைச்சர் பந்துல குணவர்தன மற்றும் இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன ஆகியோர் அண்மையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் திறைசேரியின் அதிகாரிகளுடன் சந்திப்பொன்றை மேற்கொண்டு இந்த நெருக்கடி நிலைக்கு தீர்வு காண்பது தொடர்பில் கலந்துரையாடி, இந்த நிலையை நிவர்த்தி செய்து கொள்வதற்காக பரிந்துரைகளை முன்மொழிந்துள்ளனர் எனவும் அறிய முடிந்துள்ளது.

ஆனாலும், இதுவரையில் இந்த முன்மொழிவுக்கான அனுமதி கிடைக்காமையினால், இந்த இரு நிறுவனங்களில் ஒரு நிறுவனம் விரைவில் மூடப்படக்கூடிய ஆபத்தையும் எதிர் கொண்டுள்ளதாகவும்,




மற்றைய நிறுவனம் இது வரையில் 90 கோடி ரூபா நஷ்டத்தில் இயங்குவ தாகவும் அறிய முடிகின்றது.

குறிப்பாக, சந்தையில் லாஃவ்ஸ் எரிவாயு சிலிண்டர்களுக்கு பாரிய தட்டுப்பாடு நிலவுவதாக நுகர்வோர் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

## கொரோனாத் தொற்று வீட்டிலே தாய் சாவு!

காலி, அஹுங்கம பிரதேசத்தில் வீட்டில் நான்கு பிள்ளைகளின் தாய் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அவரது மரணத்திற்கு கொவிட் வைரஸினால் ஏற்பட்ட நிமோனியாவே காரணம் என காலி மரண பரிசோதகர் பீ.ஜீ.என்.கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

உயிரிழந்தவர் அஹுங்கம பிரதேசத்தைச் சேர்ந்த 75 வயதுடைய நான்கு பிள்ளைகளின் தாய் எனத் தெரியவந்துள்ளது.

அவர் இரத்த அழுத்தம் மற்றும் நீரிழிவு போன்ற நோய்களால் காலி கராப்பிட்டிய வைத்தியசாலையில் ஏற்கனவே சிகிச்சை பெற்ற ஒருவராவார்.

வீட்டில் மூச்சு விட முடியாமல் சிரமப்பட்ட நிலையில் அவர் உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவரின் சடலம் காலி கராப்பிட்டிய வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

## வவுனியா நகரசபை அமர்வில் ரிஷாத் கைதுக்குக் கண்டனம்

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரிஷாத் பதியுதீனின் கைதுக்கு எதிராக வவுனியா நகரசபையில் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வவுனியா நகரசபையின் மாதாந்த அமர்வு தவிசாளர் இ.கௌதமன் தலைமையில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றுள்ளது.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டமையைக் கண்டித்து அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர்களான ஏ.ஆர்.எம். லரீப், எம்.எஸ்.அப்துல் பாரி, மஞ்சுளா தேவி ஆகியோரால் முன்வைக்கப்பட்ட பிரேரணை சபையில் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டுக் கண்டனத் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதன்போது அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர் ஏ.ஆர்.எம். லரீப் பிரேரணையை முன்வைத்து உரையாற்றுகையில் –

ரிஷாத் பதியுதீனின் கைது இந்த நாட்டு முஸ்லிம்களை வேதனைப்படுத்துகின்ற ஜனநாயக முறையில் ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு கைதாகக் காணப்படுகின்றது.

மேலும் இந்த ஜனநாயக நாட்டில் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரைக் கைது செய்வதாக இருந்தால் சபாநாயகருக்குத் தெரியப்படுத்தி சபாநாயகர் நீதிமன்றத்துக்கு அறிவித்த பின்னரே கைது செய்யப்பட வேண்டும். மாறாக இதற்கு மாற்றமாக இந்த கைது இடம்பெற்றிருக்கின்றது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் ஏற்கனவே ஒருமுறை கைது செய்து ஜனாதிபதி ஆணைக் குழுவில் சாட்சியம் அளித்து எவ்வித குற்றமும் அற்றவர் என விடுதலை செய்யப்பட்டவர் எமது கட்சியின் தலைவர். அவரை மீண்டும் இந்தக் குண்டுத் தாக்குதலுடன் தொடர்புபடுத்தி இடம்பெற்ற இந்த கைது ஒரு சிலரைத் திருப்திப்படுத்துவதற்கான கைதாகவே காணப்படுகின்றது.

தமிழ் பேசும் சமூகத்தின் உணர்வுகளையும், உரிமைகளையும் மதித்து முஸ்லிம் தலைமைகளை அவர்களின் குரல்களை நசுக்கும் செயற்பாடுகளையும் கைவிட்டு விட்டு நாட்டின் தற்போது கோவிட் 3ஆவது அலை வீசுகின்றது.


அதிலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்களான சந்திரகுலசிங்கம் மோகன், நா.சேனாதிராஜா, ரி.கே.ராஜலிங்கம் ஆகியோர் ரிஷாத் பதியுதீனின் கைதுக்கு எதிர்ப்புத் தெரிவித்து கருத்துக்களை முன்வைத்திருந்தனர்.




# கொரோனா நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்க யாழில் புதிய விடுதிகள் தயார் நிலையில் உள்ளன

## மாகாண சுகாதாரப் பிரிவு அறிவிப்பு



யாழ்ப்பாணம், மே 14

கொரோனா வைரஸ் தொற்றாளர்களாக அடையாளம் காணப்படுவோருக்கு சிகிச்சையளிப்பதற்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் புதிய விடுதிகள் ஆரம்பிக்கப்பட்டு தயார் நிலையில் உள்ளன என மாகாண சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையிலுள்ள புதிய விடுதிகள், அதி தீவிர சிகிச்சை மற்றும் சத்திர சிகிச்சை, ஒட்சிசன் தேவைப் படுவோருக்குச்சிகிச்சை வழங்குவதற்கும் கர்ப்பிணிகளுக்கு தொற்று ஏற்படும் போது விசேட சிகிச்சை வழங்குவதற்கும் தயார்படுத்தப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் தயார்படுத்தப்பட்டுள்ள புதிய விடுதிகளை அந்த வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் மற்றும் வைத்தியசாலை நிர்வாகத்தினர் நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர்.

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றமையால் ஒவ்வொரு மாவட்டங்களிலும் வைரஸ் தொற்று ஏற்படுபவர்களுக்கு சிகிச்சை வழங்குவதற்கு மாகாண சுகாதார பிரிவினரினால் சிகிச்சை நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**சிறுநீரகம் தேவை**

32 வயதுடைய A+ குருதி வகையைச் சேர்ந்த ஆண் சிறுநீரக நோயாளி ஒருவருக்கு A+ அல்லது A- அல்லது O+ அல்லது O- Group வகையைச் சேர்ந்த சிறுநீரகத்தைத் தானமாக வழங்கக் கூடியவர் தொடர்பு கொள்ளவும். தகுதி உடையவருக்குத் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:- SANJU
076 531 4995
075 576 0264

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.05.2021 இல் வெளியிடப்பெற்றது.

# பல்கலைக்கழக விடுதி மாணவர்களுக்கு மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன!

யாழ்ப்பாணம், மே 14

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அத்தியாவசியப் பரீட்சைத் தேவைப்பாடுகளுக்காக விடுதிகளில் மாணவர்கள் தங்க வைக்கப்பட்டிருந்த நிலையில், திடீரென அறிவிக்கப்பட்ட பயணத் தடை காரணமாக மாணவர்கள் பாதிக்கப்படாத வகையில் மாற்று ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தரின் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

நாட்டில் எழுந்துள்ள பெருந்தொற்று அபாயம் மிக்க காலப்பகுதியிலும், இறுதி ஆண்டு மாணவர்களின் பரீட்சைத் தேவைப்பாடுகளை நிறைவு செய்வதற்காக சுகாதாரப் பகுதியினரால் அறிவிக்கப்பட்ட படி சுகாதார நடைமுறைகள் பின்பற்றப்பட்டு, மாணவர்களின் சுய விருப்பின் பேரில் விடுதிகளில் வெளித் தொடர்புகள் இன்றி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு வசதிகள் செய்யப்பட்டிருந்தன. எனினும் வியாழன் நள்ளிரவு முதல் அறிவிக்கப்பட்டுள்ள பயணக் கட்டுப்பாடுகளின் காரணமாகவும், ஏற்கனவே அறிவிக்கப்பட்ட மாகாணங்களுக்கிடையிலான போக்குவரத்துத் தடை காரணமாகவும் வீடுகளுக்குச் செல்ல முடியாமல் மாணவர் விடுதிகளில் தங்க வைக்கப்பட்டுள்ள மாணவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கிளிநொச்சியில் அமைந்துள்ள தொழில்நுட்ப பீடத்தின் இறுதியாண்டு மாணவர்கள் மற்றும் யாழ்ப்பாணத்தில் உள்ள இணை மருத்துவ விஞ்ஞான பீடத்தின் இறுதியாண்டு மாணவர்களும் வீடுகளுக்குத் திரும்பும் வகையில் விசேட போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. வீடுகளுக்குத் திரும்ப முடியாத மாணவர்கள் விடுதிகளில் தங்குவதற்கும், அவர்களுக்குத் தேவையான உணவு விநியோகத்தைச் சீராகச் மேற்கொள்வதற்கும் மாணவர் நலச் சேவைகள் பிரிவு ஏற்பாடு செய்துள்ளது.

அதன் படி, மருத்துவ பீட இறுதியாண்டு மாணவர்கள் தங்க வைக்கப்பட்டுள்ள யாழ். நகர மருத்துவ பீட மாணவர் விடுதியில் தங்கியுள்ள சுமார் 150 மாணவர்களுக்கும், கிளிநொச்சி வளாகத்தில் தங்க வைக்கப்பட்டுள்ள சுமார் 175 மாணவர்களுக்கும் , மருதனார்மடத்தில் அமைந்துள்ள இராமநாதன் நுண்கலைக் கழக விடுதியில் தங்க வைக்கப்பட்டுள்ள சுமார் 65 மாணவர்களுக்கும் அந்தந்த விடுதிகளின் உணவகங்கள் ஊடாக உணவு விநியோகம் மேற்கொள்ளப்படவுள்ளது. கோண்டாவில், கொக்குவில் மற்றும் ஆனந்தக்குமாரசுவாமி மாணவர் விடுதிகளில் தங்க வைக்கப்பட்டுள்ள சட்டத் துறை, இணை மருத்துவ விஞ்ஞான பீடம் ஆகியவற்றைச் சேர்ந்த சுமார் 69 மாணவர்களுக்கு வெளியில் இருந்து விடுதிக்கு உணவு விநியோகம் செய்யப்படவுள்ளது.

இதேநேரம், அடுத்துவரும் நாள்களில் அமல் படுத்தப்படவுள்ள பயணத் தடை தளர்த்தப்பட்டதும், மாணவர்களின் விருப்பத்தின் அடிப்படையிலும், பரீட்சைச் செயற்பாடுகளின் தேவைக் கேற்பவும் அவர்கள் தத்தமது இடங்களுக்குச் செல்வதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும் எனவும் துணைவேந்தரின் ஊடகப் பிரிவு அனுப்பி வைத்துள்ள ஊடகக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## குடாநாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 58 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 3 பேரும், மன்னார் மாவட்டத்தில் 2 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில் 8 பேரும், வவுனியா மாவட்டத்தில் 2 பேரும் என வடக்கு மாகாணத்தில் அனைத்து மாவட்டங்களிலும் 74 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு வைத்தியசாலை தனிமைப்படுத்தல் பிரிவில் சேர்க்கப்பட்ட ஒருவருக்குத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் சுகாதார உத்தியோகத்தர் ஒருவருக்குத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

மாங்குளம் வைத்தியசாலை வெளிநோயா ளர் பிரிவில் சேர்க்கப்பட்ட இருவருக்குத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட 3 பேருக்குத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. தருமபுரம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட ஒருவருக்குத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

கரைச்சி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 4 பேருக்குத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவர்கள் நால்வரும் வீதி புனரமைப்புப் பணியில் ஈடுபடும் பணியாளர்கள்.

வவுனியா மாவட்ட வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் 2 பேருக்குத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அவர்கள் இருவரும் சுகாதார உத்தியோகத்தர்கள்.

வவுனியா சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த ஒருவருக்குத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

மன்னார் பொது வைத்தியசாலை வெளி நோயாளர் பிரிவில் சேர்க்கப்பட்ட இருவருக்குத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்ட 18 பேருக்கும், சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளில் 39 பேருக்கும், யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் ஒருவருக்கும் என 58 பேருக்குக் கொரோனா நோய்த் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது – என்றார்.

## முள்ளிவாய்க்கால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வாய்க்காலில் அமைக்கப்பட்டுள்ள நினைவு முற்றம் நேற்றுமுன்தினம் இரவோடிரவாக சேதமாக்கப்பட்டுள்ளது. அத்துடன், நினைவு முற்றத்தில் அமைக்கப்பட்டிருந்த சின்னமும் அடித்து நொறுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அங்கு புதிதாகக் கொண்டு வந்து வைக்கப்பட்டிருந்த நினைவுக் கல்லும் காணாமல் ஆக்கப்பட் டுள்ளது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தையொட்டி முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் முற்றத்தில் நடுகை செய்வதற்காகப் பாரிய நினைவுக் கல் நினைவேந்தல் நிகழ்வு குழுவினரால் இராணுவத்தினரின் கடுமையான நெருக்குவாரங்களுக்கு மத்தியில் நேற்றுமுன்தினம் மாலை அங்கு கொண்டு செல்லப்பட்டிருந்தது. அதையடுத்து அங்கு நேற்றுமுன்தினம் மாலை முதல் இராணுவத்தினர் பாதுகாப்பில் இருந்தனர். குறித்த பகுதி யாரும் நுழைய முடியாத பகுதியாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் இரவு அந்த நினைவுக் கல் காணாமல் ஆக்கப்பட்டுள்ளதுடன், அங்கிருந்த நினைவு முற்றமும் சேதமாக்கப்பட்டுள்ளது. அத்துடன் நினைவு முற்றத்தில் அமைக்கப்பட்டிருந்த சின்னம் அடித்து நொறுக்கப்பட்டுள்ளது.

